விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 16 திங்கட்கிழமை (01.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

# அரசாங்கத்துடன் பேசுங்கள்

# இந்திய பிரதமர் ஆலோசனை

## கூட்டமைப்பு சந்தித்தபோது

(புதுடில்லி)

*இலங்கையில் உள்ள தமிழ் பேசும் சமூகங்களின் அரசியல் தலைவர்களுடனும் அரசாங்கத்துடனும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வலியுறுத்தியுள்ளார்.*

*இந்தியப் பிரதமரைப் புதுடில்லியில் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.*

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடான சந்திப்பின் போது வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கடிதமொன்றை சம்பந்தன் மோடியிடம் கையளித்தார். விக்னேஸ்வரனை தன்னை சந்திக்க வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளதாக மோடி தெரிவித்தார் என தகவலகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

புதுடில்லியின் நன்கு அறியப்பட்ட 7 ரேஸ்கோர்ஸ் வீதி என்ற முகவரிக்கு முன்னால் பாதுகாப்பு படையினர் அந்த மூன்று வாகனத் தொடரணியை தடுத்து நிறுத்தினர். அவர்களை அந்த வாகனத்திலிருந்து இறங்கி வேறு மூன்று வாகனங்களில் பயணிக்குமாறு கோரினர. அந்தப் பணயம் இந்திய பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸதலத்தை நோக்கி அமைந்திருந்தது.

அங்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி சம்பந்தனையும் அவரது 5 நாடாளுமன்ற சகாக்களையும் வரவேற்றார். தமிழில் வணக்கம் என்றார்.

சிறிது நேரத்தின் பின்னர் ஆரம்பமான பேச்சுக்களின்போது மோடி சம்பந்தனை பார்த்து நான் உங்களை முதலில் செவிமடுக்க விரும்புகிறேன் என்றார். மோடி இந்தியில் தெரிவித்தது மொழி பெயர்க்கப்பட்டது.

30 நிமிடங்களே நடைபெற விருந்த அந்த சந்திப்பு ஒரு மணிநேரம் வரை நீடித்தது. அதன் முடிவில் மோடி நாங்கள் உங்களுடன் நூறு வீதமிருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

தனது இரு கரங்களையும் தனது நெஞ்சோடு அணைத்தபடி சம்பந்தன் சுட்டிக்காட்டும் விடயங்களை மோடி உன்னிப்பாக அவதானித்தார. இராணுவமயப்படுத்தல, சிங்கள குடியேற்றம் மற்றும் தமிழர் பகுதிக

19 ஆம் பக்கம் பார்க்க....

# ஜனவரி 3ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்?

(கொழும்பு)

ஜனாதிபதி தேரதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி இடம் பெறலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 18-வது சரத்து குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனைகளை பெற்றுக் கொண்ட பின்னரே குறித்த திகதி குறித்து முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் குறித்த வர்த்தமானி அறிவித்தல எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் நவம்பர் 19ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்-கொழும்பு சொகுசு பஸ் சாரதிகள் நேற்றிரவு பகிஷ்கரிப்பு

### பயணிகள் திண்டாட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் நேற்று இரவு திடீரென பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்ததையடுத்து அங்கு பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்ட அதேவேளை இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று இரவு 7.30 மணி முதல் இரவு 11.30 மணிவரை பெரும் பரபரப்பு நிலவியது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணத்

19 ஆம் பக்கம் பார்க்க....

## புதிய ஆணையாளர் இன்று பதவியேற்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின்மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய ஆணையாளர் இளவரசர் செய்யத் அல் ஹுசைன் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மகிந்த-புஷ் இரகசிய சந்திப்பு?

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டப்ளியூ.புஷ்சை சந்திக்கவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு தெரியாமல் அமெரிக்காவின் வூஸ்டன் நகருக்கு சென்றதாக இராஜதந்திர தரப்புக்களில் பேசப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் எவருக்கும் அறிவிக்காமல அவசரமாக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றதுடன் இது குறித்து அவரது செயலகம் முன்கூட்டியே அறிவித்திருக்கவில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஹெல உறுமயவுக்கு 4 கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழு தலைவர் அத்துரலியரத்தின தேரரால் முன் வைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு திருத்த யோசனைக்கு நான்கு கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை

19 ஆம் பக்கம் பார்க்க....

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நிபந்தனையுடன் பங்கேற்கத் தயார்

## கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நிபந்தனையுடன் பங்கேற்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடரபில் அரசாங்கத்துடன் பேச்சுவார்ததை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்.

2011ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்க நாங்கள் தயார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீரவைக் காண தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தயாராகவே உள்ளது.

2012ஆம் ஆண்டில் அரசாங்கமே

19 ஆம் பக்கம் பார்க்க....

## 49 ஆவது இடத்தில் கொழும்பு!

(கொழும்பு)

உலகில் வாழ்வதற்கான மிகவும் உகந்த நகரங்களில் கொழும்பு நகருக்கு முக்கிய இடம் வழங்கப் பட்டுள்ளது.

உலக நகரங்களை தரப்படுத்தும் வரிசையில் கொழும்பு நகருக்கு 49-வது இடம் கிடைத்துள்ளது. அத்

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## இலங்கையிடம் ஐ.நா கோரிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருடனும், விசேட அறிக்கையாளர்களுடனும் ஒத்துழைக்குமாறு இலங்கையை கேட்டுக்கொண்டுள்ள பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நாவின் செயற்குழு இந்த விடயத்தில் அவசியமான சகல உதவிகளையும் வழங்குமாறும் கோரியுள்ளது.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்கள் அச்சுறுத்தப்படுவது மற்றும் பழிவாங்கப்படுவது குறித்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இலங்கை அரசாங்கத்திற்கு நான்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்ட குழு கவலை வெளியிட்டுள்ளது.

அதில் இரண்டு கடிதங்களுக்கு பதிலளித்ததற்காக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ள குழு, பிரகடனத்தின் 13-வது பிரிவின் படி விசாரணைகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் முறைப்பாடு செய்தவர்கள், சாட்சிகள், விசாரணையை மேற்கொள்பவர்கள் துன்புறுத்தல்கள், மிரட்டல்கள், பழிவாங்கப்படுதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும என்பதையும் நினைவுபடுத்தியுள்ளது.

பெருமளவு சம்பவங்கள் தொடர்பாக இலங்கை பதிலளித்துள்ளதை பாராட்டியுள்ள ஐ.நா குழு இலங்கைக்கான விஜயம் மிகுதியாகவுள்ள சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்குதவியாக அமையும் என தெரிவித்துள்ளதுடன் 2006 இல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு அனுமதி கோரி விடுத்த வேண்டுகோளிற்கு இன்னமும் சாதகமான பதில் கிடைக்காததை சுட்டிக்காட்டியுள்ளதுடன், சாதகமாக பதில் விரைவில் கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (எ-6)

# 157 இலங்கையருக்காக 12.2 மில்.டொலர் செலவு

## அவுஸ். அரசு தெரிவிப்பு

(சிட்னி)

நவுரு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 157 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக அவுஸ்திரேலிய அரசாங்கம் 12.2 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நவுரு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக இவ்வாறு பணம் செலவிடப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர் படகுகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் பணம் செலவிடப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிப் பயணித்த 157 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கடலில 29 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விமானப் போக்குவரத்து, நாளாந்த செலவுகள் உள்ளிட்ட பல்வேறு செலவுகளும் இதில உள்ளடக்கப்பட்டுள்ளன.

சட்ட செலவுகளுக்காகவும் அதிகளவில் செலவிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-6)

# விரைவில் ஆயிரம் புதிய கிராம அலுவலர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவும் கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் மேலும் ஆயிரம் கிராமு அலுவலர்களை புதிதாக நியமிப்பதற்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மேலும் சுமார் ஆயிரத்து 600 வெற்றிடங்கள் தற்போது நிலவுகின்றன. அவற்றை நிரப்பும் வகையில் ஆயிரம் பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-6)

# உலக அஞ்சல் தினம் 2014 தேசிய நிகழ்வு யாழ்ப்பாணத்தில்!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அஞ்சல் தினத்தின் தேசிய நிகழ்வு வரலாற்றின் முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஒக்ரோபர் 9-ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் தின தேசிய நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் நேற்று யாழ்.பிரதம தபாலகத்தில் வட மாகாண பிரதித் தபால்மா அதிபா என்.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் அஞ்சல் திணைக்கள உயர் அதிகாரிகள், தபாலதிபர்கள், உபதபாலதிபர்கள் மற்றும் அஞ்சலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் உரையாற்றிய வடக்கு மாகாண பிரதித் தபால்மா அதிபர், உலக அஞ்சல் தினதில் தேசிய நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில மேற்கொள்வதற்கு தபால்மா அதிபர் தீர்மானித்துள்ளார். வரலாற்றில் முதற்தடவையாக தமிழ்ப் பிரதேசம் ஒன்றில் தேசிய நிகழ்வு நடைபெறவுள்ளது.

அதன்படி அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துகொள்ள வேண்டும். அதற்கு முன்னதாக செப்ரெம்பர் மாதம் முழுவதும் அஞ்சல் தினத்தை முன்னிட்டு பல்வேறு பொது, சமூக நிகழ்வுகளை ஒவ்வொரு தபாலகமும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தபாலகங்கள் தங்களின் வியாபார நடவடிக்கைகளை செப்ரெம்பர் மாதத்தில் அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய அஞ்சல் தின நிகழ்வில் அமைச்சர்கள், அஞ்சல் திணைக்கள உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய கூட்டத்தில் அஞ்சல் திணைக்கள தேசிய நிகழ்வை மேற்கொள்வதற்கான குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# ஜனாதிபதி மகிந்தவை பாதுகாக்க வேண்டும்

## அமைச்சர் எஸ்.பி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி பாதுகாக்கப்பட வேண்டும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊவாவில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த கோரிக்கையை அவர் விடுத்தார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு இன்று மற்றுமொரு சவால் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் செயற்படும் சில குழுக்கள் மற்றுமொரு போரைக் கொண்டுவர முயற்சிக்கின்றன.

சில சக்திமிக்க நாடுகளும் இந்த முயற்சிகளுக்கு ஊக்கமளித்து சமாதானத்தை குலைக்க தயாராகிக் கொண்டிருக்கின்றன.

எனவே இலங்கை மக்கள், அரசாங்கம் இக்கட்டான நிலையில் உள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று எஸ்.பி திஸாநாயக்க கோரியுள்ளார். (எ-6)

# தபால் மூல வாக்களிப்பு செப்ரெம்பர் 4,5 இல்

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூலம் வாக்களிப்பதற்கு 30 ஆயிரத்து 655 பேர் தகுதி பெற்றுள்ளனர். இம்மாகாணத்துக்கான தபால்மூல வாக்களிப்பு செப்டெம்பர் நான்காம், ஐந்தாம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்தில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றவர்களில் 19 ஆயிரத்து 983 பேர் பதுளை மாவட்டத்தையும் 10 ஆயிரத்து 672 பேர் மொனராகலை மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறித்த இரு தினங்களில் வாக்களிக்க முடியாத தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி வாக்களிக்க முடியுமெனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-6)

கமநலத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (எழுதுவினைஞர்) பரீட்சைக்குரிய வழிகாட்டி நூலை தவசேகர் ஆசிரியரின் வகுப்புகள் நடைபெறும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவிலும் (யாழ்.நகர்) பிரபல புத்தக நிலையங்களிலும் பெறுக்கொள்ள முடியும். தொ.பே: 0754164564

**தவறிவிட்டது**

நவரட்ணம் ரவிச்சந்திரன்713580759V என்ற அடையாள அட்டையும் மற்றும் முக்கிய ஆவணங்களும் கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் தொ.பே: 0771711819

S.T.மோட்டோர்ஸ் - பஜாஜ்
(சி-8381) யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**அமிர்தநாதர் லாபனா**

கடந்த 28.08.2014 இடம்பெற்ற மொறட்டுவ பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் Bachelor of Town and Country Planning (B.Sc) பட்டம் பெற்ற அமிர்தநாதர் லாபனா அவர்களை வாழ்த்துவதுடன் இன்று (01.09.2014) தனது பிறந்தநாளையும் கொண்டாடுகிறார். இவருக்கு குழந்தை யேசுவின் எல்லாவித நலன்களும் கிடைத்து வாழ்வில் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.



வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், தம்பிமார், அக்ஷியன், வேவி அன்ரி.

8-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(7547)




இரத்மலானையைச் சேர்ந்த 10 வயதான நவம் அஞ்சன ஜயக்கொழ என்ற மாணவனால் எவ்விதமான பசளைகளும் இடாமல் வெறுமனே தண்ணீர் மட்டுமே ஊற்றி வளர்க்கப்பட்ட புளிவாழைமரமொன்று ஈன்ற குலையில், அதிசயமான வாழைச்சீப்பொன்று இருந்துள்ளது. அச்சீப்பில் 71 காய்கள் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் நேரடிப்பேச்சில் கூட்டமைப்பு ஈடுபடக் கூடாது!

## மேல் மாகாண அமைச்சர் தெரிவிப்பு



இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடியாக பேசக் கூடாது என மேல் மாகாணசபை அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இந்திரா காந்தி ஆட்சிக் காலம் முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகள், உள்நாட்டு பிரச்சினைகள் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய உள்விவகாரங்களில் இலங்கை ஒருபோதும் தலையீடு செய்ததில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் பிரதிநிதிகளாகவே செயற்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளர்க கருதுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்ந்தும் செல்லுபடியாகாது என அவர் தெரிவித்துள்ளார். இலங்கை- இந்திய உடன்படிக்கை தொடர்பில் போதிய தெளிவின்றி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்து மாறு கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் வடக்கிற்கு வழங்கப்படாவிட்டால் அது தொடர்பில் உச்ச நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற நீதியரசர் என்ற வகையில் இது குறித்து வட மாகாண முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரனுக்கு தெளிவான விளக்கம் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விரைவில் விசாரணை நடத்தப்பட உள்ளதாக காணாமற் போனவர்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வேல் பரணகம மீண்டும் தெரிவித்துள்ளார்.

தனியான விசாரணைகள் நடத்தப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு சமாந்தரமாக யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் கிளிநொச்சியில் இந்த விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அமர்வுகளை எப்போது நடத்துவது என்பது குறித்த இறுதித் திகதிகள் நிர்ணயிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையில் கிளிநொச்சியில் முதல் கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சூகியை சந்தித்து பேச்சுவார்த்தை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மியன்மாரின் நோபல் பரிசு பெற்ற ஜனநாயக போராட்டத்தலைவி ஆன் சாங் சூ கீயை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். மியனமாருக்கான அவரது விஜயத்தின் போதே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

யாங்கூனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது ஆன் சாங் சூகியின் கட்சியின் முக்கிய தலைவர்களும் கலந்து கொண்டதாகவும், சமாதானம் மற்றும் தேர்தல் முறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மார் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றுவதற்கான காலம் இன்னமும் உருவாகவில்லை என முன்னாள் ஜனாதிபதி இந்த சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சந்திப்பானது இலங்கை அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதோடு ஆளும் தரப்பினரின் விமர்சனத்திற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஷில்போதயம் கண்காட்சியை பார்த்து மகிழ்ந்தார் ஜனாதிபதி





(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்று வரும் ஷில்போதயம்-2014 தேசிய கைப்பணி கண்காட்சியினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த கண்காட்சி இடம்பெறுகின்றது.

தேசிய அருங்கலைகள் பேரவை, பனை அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் ஆகிய நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட உற்பத்திகள் மற்றும் ஆக்கப் பொருட்களின் காட்சி கூடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, மேலதிக செயலாளர் சுசந்த டி சில்வா, கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நவாஸ் ரஜாப்தீன், தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்திகீர்த்தி சேன, தேசிய வடிவமைப்பு நிலை யத்தின் தலைவர் மார்ஷல் ஜனதா, வடகடல் நிறுவனத் தலைவர் திஸவீரசிங்க உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சி நேற்றுடன் நிறைவுபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்றைய இராசி பலன்

01.09.2014
ஆவணி 16, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சப்தமி பின்னிரவு 12.42 மணிவரை
விசாகம் பிற்பகல் 3.00 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை

வளவன்

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வேலைச்சுமை கூடி சஞ்சலங்கள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், சுவாரஸ்யமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும், கல்வி நலன்கருதி சுப செலவுகள் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குண மறிந்து நடந்து கொள்வர், ஆழ்ந்த சிந்தையுண்டு, எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயன சுகக்குறைவான நாள்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவு திருப்திகரமாக அமையும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**கும்பம்:** எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்:** எதையும் அன்பால் சாதித்துக் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பாக்கிகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொமர்ஷல் வங்கியால்

# கூட்டாமை நிறுவனங்களுக்கான இணைய வங்கி சேவை தரமுயர்த்தல்



கொமர்ஷல் வங்கி அதன் இணையத்தளமான www.combank.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு அளிக்கும் வசதிகளை மேம்படுத்தியுள்ளது. இதனால் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் பல புதிய நன்மைகளை அனுபவிக்கவுள்ளனர்.

கூட்டாண்மை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இரண்டு அடுக்கு பிரவேச முறையிலான புதிய பாதுகாப்பு முறையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு வாடிக்கையாளர் தனக்கு மிகவும் பிடித்த ஒரு புகைப்படத்தை பாதுகாப்பு அறிமுக புகைப்படமாக இந்த இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்து கொள்ளலாம். வாடிக்கையாளர் இதில் பிரவேசிக்கின்றபோது அந்த புகைப்படம் காட்சிப்படுத்தப்படும். எனவே கடவுச் சொல்லை பாவித்து பிரவேசிக்கும் முன் தாங்கள் பிரவேசிக்கும் தளம் சரியானதா என்பதை உறுதி செய்து கொள்ள இந்த முறை உதவும். மேலும் கணனித் திரையில் ஒரு விசைப பலகை வழங்கப்படும் வாடிக்கையாளர்கள் விரும்பினால் இந்த விசைப்பலகை பாவிப்பதன் மூலம் தமது கடவுச்சொற்கள் திருடப்படுவதைத் தடுக்கலாம்.

இந்தப் புதிய வெளியீட்டில் மேலும் பல பெறுமானங்களும் சேர்க்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. கொடுப்பனவுகளின்போது தனியான இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரத்துக்கான வசதியும் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாரிய கம்பனிகள் தமது கொடுப்பனவுகளை தன்னியக்க முறையில் செய்து கொள்ள இது உதவுகின்றது. பல்வேறு கம்பனிகளின் காசோலை ஒப்பமிடல் விதிமுறைகளுக்கு அமைய கொடுப்பனவுகளின் எல்லையை பிரயோகிக்கும் ஆற்றலும் இதில் உள்ளது. மேலும் இந்த முறையானது கம்பனிகள் தமது பட்டியல் கொடுப்பனவுகளுக்கான திகதியை முன்கூட்டியே தீர்மானித்து உரிய திகதியில் அவற்றை செலுத்துவதற்கான வசதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இடம்பிடித்துள்ள கொமர்ஷல் வங்கி இலங்கையில் 237 கிளைகளையும் 599 ATM வலையமைப்புக்களையும் கொண்டுள்ளது.

## கொமர்ஷல் வங்கி பணிப்பாளர் சபைக்கு மகிந்த சிறிவர்த்தன

கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு மு.ஆ.மகிந்த சிறிவர்தன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளராக உடனடியாக அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார் என்று வங்கி அறிவித்துள்ளது. நிதி திட்டமிடல் அமைச்சில் பொது வருவாய் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிவரும் சிறிவர்தன வரிக் கொள்கை, அரச வருவாய் மற்றும் பேரண்ட பொது வருவாய் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவராவார் என்று வங்கி அறிவித்துள்ளது.

20 வருடங்களுக்கு மேற்பட்ட மத்திய வங்கி அனுபவம் கொண்ட சிறிவர்தன, இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள ளார். இலங்கை வங்கி உட்பட பல நிறுவனங் களின பணிப்பாளர் சபையிலும் பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு.



ஜனசக்தி நிறுவனத்தில் சிறப்பாக பணிபுரிந்திருந்த 45 ஊழியர்களுக்கு சீனாவுக்கு சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்பை அண்மையில் அந் நிறுவனம் வழங்கியிருந்தது. இவ்வாறு தெரிவாகியிருந்த ஊழியர்களுக்கு 6 தினங்களை சீனாவில் களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், இக்கால கட்டத்தில் இவர்கள் பல்வேறு குழுநிலை செயற்பாடுகள மற்றும் களியாட்ட நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர். உயர் தரமான சேவைகளை வழங்கி தமது விற்பனை துறையை மேம்படுத்தும் பொருட்டு ஜனசக்தி நிறுவனம் தனது மனித வள அபிவிருத்தி மற்றும் ஊழியர் பயிற்சி செயற்பாடுகளுக்காக வருடாந்தம் 45 மில்லியன் ரூபாயைச் செலவிடுகின்றது.

## நன்மதிப்புள்ள நிறுவனங்கள் யுனிலீவர் நான்காம் இடத்தில்

2014-ம் ஆண்டிற்கான Lanka Monthly Digest சஞ்சிகையால் வெளியிடப்பட்டுள்ள இலங்கையிலுள்ள மிகவும் நன் மதிப்புடைய நிறுவனங்களின் பட்டியலில் 4 ஆவது ஸ்தானத்தில் இடம் பிடித்துள்ள யுனிலீவர் சிறிலங்கா நிறுவனம் தொடர்ந்து எட்டாவது ஆண்டிலும் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளது.

இக்கருத்துக்கணிப்பில் உச்ச ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்ட பல்தேசிய நிறுவனமாகத் திகழும் யுனிலீவர், பாரிய சர்வதேச நிறுவனம் மற்றும் உள்நாட்டில் ஆழமாக வேரூனறியுள்ள நிறுவனம் என்ற தனது பலத்தை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

பல்தேசிய நிறுவனங்கள் பிரிவின் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யுனிலீவர், மிகவும் நன்மதிப்புடைய முதல் 100 நிறுவனங்களின் பட்டியலில் உச்ச ஸ்தானத்தில் திகழும் விரைவாக நகரும் நுகர்வோர் உற்பத்திகள் நிறுவனமாகவும் இடம்பிடித்துள்ளது.

நாட்டிலுள்ள முன்னணி வர்த்தக வெளியீடான Lanka Monthly Digest சஞ்சிகையின் கருத்தாக்கத்தின் கீழ் இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்கள் என்ற கருத்துக் கணிப்பு, Nielsen ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்டு இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களின் பட்டியலை வருடாந்தம் வெளியிட்டு வருகின்றது




# இன்று முதல் கொழும்பில் சினமன்ட் ரெட்

கொழும்பின் முன்னணி நட்சத்திர ஹோட்டல் தொடரான சினமன் ஹோட்ட்ல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ் தொடரின் மற்றுமொரு புதிய உள்ளடக்கமாக சினமன்ரெட் எனும் "Lean luxury" ஹோட்டல் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. கொழும்பு 3, ஆனந்த குமாரசுவாமி மாவததையில் அமையப் பெற்றுள்ள இந்த சினமன் ரெட் ஹோட்டல், நாட்டின் முதலாவது "Lean luxury" ஹோட்டல் எனும் பெருமையையும் கொண்டமையவுள்ளது.

கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள சினமன் ரெட், 26 மாடிகளை கொண்டுள்ளது. இதில் 243 இடவசதிகளை கொண்ட அறைகள் காணப்படுகின்றன. ஹோட்டலின் நவீன உள்ளம்சங்களில் சுயமாக ஹோட்டலில் அனுமதி பெறுவது (Check-in) மற்றும் வெளியேறுவது (Check-out) பகுதிகளை கொண்டுள்ளது. அத்துடன் ந-கொன் சேர்ஜ் சேவைகள், எந்நேரமும் சேவையிலிருக்கும் பொருள் வாங்கும் இயந்திரம் (Vending Machine), IPTV கட்டமைப்புகள் போன்றனசகல அறைகளிலும் காணப்படுகின்றன. தடங்கலில்லாத வயர்லஸ இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. வரையறையற்ற நீச்சல் தடாகத்தை இந்த ஹோட்டல் கொண்டுள்ளதுடன் மது அருந்தக்கூடிய பகுதி (roof top bar), உடற் பயிற்சி நிலையம் ஆகிய சகல அம்சங்களும் 26ஆவது மாடியில் அமைந்துள்ளன. கொழும்பு நகரையும் இந்திய பெருங்கடலையும் 360 பாகையில் சுற்றி பார்வையிடக்கூடிய வசதிகளையும் வழங்குகிறது.

சினமன் ஹோட்டல்ஸ் அன்ட் ரிசோர்ட்ஸ் தொடரில் 13 ஹோட்டல்கள் அடங்கியுள்ளன. இதில் இரு கொழும்பு சிட்டி ஹோட்டல்களும், 8 ரிசோர்ட்களும் இலங்கையில் அமைந்துள்ளதுடன், மேலும் 3 ரிசோர்ட்கள் மாலை தீவுகளில் அமைந்துள்ளன.

## இந்தியா வளர்ச்சிக்கு திரும்பியுள்ளது - ஜெட்லி

இந்திய மத்திய அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பாதைக்கு திரும்பியுள்ளது என இந்திய மத்திய நிதி அமைச்சர் அருண்ஜெட்லி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இந்தியப் பொருளாதாரத்தை வளர்ச்சி பாதைக்கு இட்டுச் செல்லும் வகையில் மத்திய அரசு பல்வேறு தொலைநோக்கு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக பல்வேறு துறைகளில் அன்னிய நேரடி முதலீட்டை வரவேற்கும் அரசின் முடிவால் முதலீட்டாளர் களிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளது. மேலும் உள்நாட்டில் தயாரிப்பு மற்றும் சேவை துறைகளின் வளர்ச்சி விறுவிறுப்படைந்துள்ளது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதே அரசின் முக்கிய நோக்கமாகும். வரி தொடர்பான பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காணும் வகையில் சிறப்பு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு மற்றும் ரயில்வேயில் அன்னிய நேரடி முதலீட்டிற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட உள்ளன. இதையடுத்து ரியல் எஸ்டேட் துறையிலும் விதிமுறைகள் தளர்த்தப்பட உள்ளது.

காப்பீட்டு துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தின் அடுத்த குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும். பங்கு விற்பனை மத்திய அரசு தயாரிப்பு மற்றும் அடிப்படை கட்டுமான துறையில் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொதுத் துறை பங்கு விற்பனையில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் சரக்கு மற்றும் சேவை வரியை செயல்படுத்த தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் இல்லாத வகையில் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 5.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இது ஊக்கமளிப்பதாக உள்ளது. இனி வரும் காலாண்டுகளிலும் பொருளாதார வளர்ச்சி மேலும் சிறப்பாக இருக்கும். இவ்வாறு ஜெட்லி கூறியுள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,008.02 | 7,034.09 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,863.88 | 3872.51 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 5,720.527

[illegible] லங்கா சீமெண்ட்(10.40),சனச டெவலப்மண்ட் பாங்(103.50), ஈகுவிட்டி(50.10),றோயல் பாம்ஸ்(40.90),சிலோன் பிறின்டர்ஸ்(1999.90).

[illegible] லங்கா சென்சரி(W)(0.90),யுனைட்டட் மோட்டர்ஸ் (98.90),குட் ஹோப்(1522.00),பிசி பார்மா(1.70),ஓரியண்ட் காமன்ஸ்(18.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.75 | 131.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 216.85 | 218.95 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.77 | 174.32 |
| சுவிஸ் பிராங் | 139.72 | 144.83 |
| கனேடிய டொலர் | 117.92 | 121.93 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.54 | 124.05 |
| சிங்கப்பூர் டொலர் | 102.56 | 105.93 |
| ஜப்பான் யென் | 1.23 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த போட்டியிட சட்ட வல்லுநர்களும் எதிர்ப்புத் தெரிவிப்பு

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறைபாடுகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் நழுவிப்போய்விட்டதென சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர் என்று சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முதன் முறையாக வெளியிட்ட சட்ட ரீதியான தர்க்கம் சக்திமிக்கதெனவும் அதனை மீற முடியாதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரசியலமைப்பின் 32/2 சரத்தின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு நபரும் அதன் பின்னர் அந்தப் பதவிக்கு மக்களால் தெரிவு செய்யத் தகுதியற்றவராகிறார் என்று சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஜனவரி 27 ஆம் திகதி இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யுப்பட்டவுடன் சட்டவிதிகள் செயற்படுவதாக சரத் என். சில்வா சமீபத்தில் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அப்போது இந்த சட்டவிதிகள் அமுலில் இருந்த போதே அவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதால் அவர் மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராகிறார்.

இருந்தும் 2010 செப்டெம்பர் 9 ஆம் திகதி முதல் நடைமுறையிலிருந்த 18ஆவது திருத்த சட்டத்தின் மூலம் மேற்கண்ட 31/2 சரத்து நீக்கப்பட்டது.

இதன்படி காலவரையறையின்றி மீண்டும் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்ய எந்தவொரு நபருக்கும் வாய்ப்புள்ளது. இருந்தும் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்காது. இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மின்சார வேலியில் சிக்கி சிறுவன் துடிதுடித்துப்பலி

பயிர்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் அகப்பட்டு 15 வயதுடைய சிறுவன் உயிரிழந்த சம்பவம் அலவத்துகொடை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அலவத்துகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரதுகொஹோ-தீகல எனுமிடத்தைச் சேர்ந்த துனுவில ரத்னபால மஹா வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி கற்று வந்த அமில ஹேரத்பண்டார என்ற 15 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது.

இம் மரணம் தொடர்பான விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி எம். வசீர் நடத்தியதுடன் கண்டி வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கேஎஸ் சேனாரத்ன பிரேத பரிசோதனை நடத்தி சாட்சியமளித்தார். (இ)

# கொழும்பு தபால் பரிவர்த்தனையில் பெறுமதியான பொருட்கள் திருட்டு

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு அனுப்பப்பட்ட மூன்று பொதிகளிலிருந்த கையடக்கத் தொலைபேசிகள், டெப்லட் கருவிகளை திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் தபால் நிலைய பொறுப்பதிகாரிகள் இருவர் உட்பட 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மே மாதம் 3ஆம் திகதி, டுபாயிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட வெளிநாட்டுப் பொதிகள் மூன்று, அதன் உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்படாத நிலையில் இருந்துள்ளன. இதனால் எழுந்த சந்தேகத்தை அடுத்து, அப்பொதிகள் உடைத்து பார்க்கப்பட்டன. இதன்போது, அப்பொதிகளுக்குள் பத்திரிகைகளும் கொங்கிறீட் கற்கள் சிலவும் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து, கோட்டையிலுள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலைய வெளிநாட்டு தபால் பிரிவு அதிகாரி ஜே.எச்.எம்.சமரசிங்கவினால், கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய தபால் நிலைய பொறுப்பதிகாரிகள் இருவர் உட்பட 8 பேரை கைது செய்தனர்.

குறித்த மூன்று பொதிகளிலும், 173 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 4 டெப்லட் கருவிகள் இருந்துள்ளன என்றும் இவை, புறக்கோட்டையில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# ஐ.தே.கவில் சில மாற்றங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களை இலக்கு வைத்து இந்த மாற்றம் செய்யப்பட உள்ளது.

கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தல்களுக்கு மட்டுமன்றி, எதிர்வரும் ஆண்டுகளில் நடைபெறவுள்ள தேசிய தேர்தல்களுக்கு ஆயத்தமாகும் வகையில் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களில் இவ்வாறு கட்சியில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்காக சஜித் பிரேமதாசவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விரைவில் கட்சியின் பதவிகள் சிலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனவும் ஆளும் கட்சியினர் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)


**வற்றாப்பளை ஸ்ரீஞானமூர்த்தி பிள்ளையார் கோயில் கட்டட நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

29.08.2014 வெள்ளிக்கிழமை ஆலய முன்றலில் மாலை 5 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விபரம்

முதலாம் பரிசு:-கோ.டக்ஷிகா வெளிக்குளம் 59/2, 3ஆம் குறுக்கு, வவுனியா T.P.0770665757, சிட்டை இல.3875

இரண்டாம் பரிசு:-A.V.S.நாதன், இல.24, சுற்றுவட்டவீதி, நெளுக்குளம், வவுனியா. சிட்டை இல.4212

மூன்றாம் பரிசு:- ம.றஞ்சனா வற்றாப்பளை, முள்ளியவளை T.P.0779668355 சிட்டை இல.1265

10 ஆறுதல் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகளின் சிட்டை இலக்கங்கள்

4 ஆம் பரிசு சிட்டை இல 1- 1209, 5ஆம் பரிசு சிட்டை இல 2-4827, 6ஆம் பரிசு சிட்டை இல 3-9965, 7ஆம் பரிசு சிட்டை இல 4-10193, 8ஆம் பரிசு சிட்டை இல 5-363, 9ஆம் பரிசு சிட்டை இல 6-1579, 10 ஆம் பரிசு சிட்டை இல 7-3992, 11ஆம் பரிசு சிட்டை இல 8-11842, 12 ஆம் பரிசு சிட்டை இல 9-4594, 13 ஆம் பரிசு சிட்டை இல 10-7142,

**இங்ஙனம்:- ஆலய நிர்வாகம்**

**தொ.இல. 0778176048**

(சி-8376)



**எங்கள் பீடாதிபதிக்கு வாழ்த்துக்கள்**



**25.08.2014 இல் நடைபெற்ற பீடாதிபதி தேர்தலில் அமோக வெற்றி பெற்ற எமது பீடாதிபதி பேராசிரியர்**

**தி.வேல்நம்பி**

**அவர்களுக்கான வாழ்த்துக்கள்**

பல்கலைக்கழகத்தில் பல உயர் பதவிகள் வகித்து
பதவியைப் பெருமைப்படுத்தினீர்கள் பதவிகளே உங்களை நாடி வந்தன.
அயலவரே அறியாதோர் அநேகர். இந்நிலையில் எமது பீடாதிபதி
அறிவினால், ஆய்வுப் புலமையினால், சமூக உறவினால் சிறந்த
தலைமைத்துவப் பண்பினால், அயலராலும் ஊராலும் உலகத்தினாலும்
அறியப்பட உத்தமர். எமக்கில்லை இனிக்கவலை. ஏனெனில்
நம்பிடுவோரை காத்துத் துணிவுடன் சேவை செய்வீர்.
எம் இறைவன் அருள் உண்டு.
எங்களது ஒத்துழைப்பும் என்றும் உங்களுக்கு உண்டு.
கடந்த காலத்தைப் போல எமது பீடமும் பல்துறை
வளர்ச்சி காண்பதற்குத் தூய்மையான
துணிந்த சேவைக்கு எங்கள் வாழ்த்துக்களும் ஒத்துழைப்பும்.

**முகாமைத்துவ வணிகபீடம், மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

(7588)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 65 ½ செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, MBA, HRM, Dip. in Software Engineering / உதவி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1838 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 23 ¾<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc, MSc / கல்வி மேம்பாட்டு அலுவலா<br>தொ.இ: G/2702 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 30 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Dip. in IT, Seneca College / IT, Support Specialist (கனடா)<br>தொ.இ: B/1839 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 17 ¼<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: G/2705 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 11 ¾ செவ் 4 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/1842 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 12 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc / அரச தொழில்<br>தொ.இ: G/2714 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 41 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc, MSc /ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1843 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 34 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/2715 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே


தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரத்தானிடம் உறவுகள் மன்றாட்டம்



காணாமற் போன உறவுகளை கண்டுபிடிக்கக் கோரி அவர்களின் உறவுகளினால் தீபங்கள் ஏற்றி தேங்காய் அடித்து விசேட பிரார்த்தனை நிகழ்வு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 300 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள போதும் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை.

மனிதவுரிமை மீறல்கள் காணிப் பிரச்சினைகள், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள், பொருளாதார பிரச்சினை என பல பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

நாம் பல அரசியல்வாதிகளையும் அரச நிறுவனங்களையும் இறுதியாக ஆணைக்குழுக்களையும் நம்பி நம்பி ஏமாற்றம் அடைந்துள்ளோம். எமது பிரச்சினைகளை யாரிடம் சொல்லுவது. யார் தீர்த்து வைக்கப்போவது என தெரியாது தவிக்கின்றோம்.

இந்நிலையில் எமது உறவுகளை மீட்டுத் தரக்கோரியும் எமது பிரச்சினைகளை தீர்க்கக் கோரியும் கடவுளின் சந்நிதானத்தில் தீபம் ஏற்றி தேங்காய் அடித்து அழுது புலம்பி வழிபடுகின்றோம். கடவுளாவது எமது துன்பத்தை புரிந்து எமது உறவுகளை மீட்டுத் தர வேண்டும் என அங்கு கலந்து கொண்டவர்கள் கண் ணீர் மல்க தெரிவித்தனர். (இ-250)

# ஜனாதிபதி குறித்து பொய்ப்பிரசாரம்



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகவீனமுற்றுள்ளார் என்றும் அதற்கு சிகிச்சை பெறுவதற்காகவே அவர் அமெரிக்கா சென்றார் என்றும் முகப்புத்தகத்தினூடாக பொய்ப் பிரசாரங்களைச் செய்யும் எதிர்க் கட்சிகள் அதன்மூலம் சந்தோசப்பட்டு வருகின்றனர் என இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நலமாகவுள்ளார். அவர் சுகவீனமுற்றார் என்பது பொய். அவர் இன்னும் நீண்ட காலத்துக்கு இந்தநாட்டை ஆட்சிசெய்வார்என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்ட அமைச்சர் அமரவீர, தனிப்பட்ட காரணத்துக்காகவே அவர் அமெரிக்கா சென்றார் என்றும் தெரிவித்தார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 150 | 120 |
| தக்காளி | 30 | 60 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 45 | 60 |
| கோவா | 60 | 80 | 70 | 70 |
| கரட் | 80 | 100 | 90 | 100 |
| பூசணி | 20 | 30 | 35 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 90 | 70 | 75 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 90 | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 70 | 90 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 60 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 50 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 130 | 120 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 35 | 25-35 |
| இராசவள்ளி | 100 | 80 | 90 | 100 |

# எஸ்.பியின் மகன் இணையமைப்பாளர்



(கொழும்பு)

உயர் கல்வியமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கவின் மகனான நாரத திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஹங்கு ரான் கெத்த தொகுதியின் இணையமைப்பாளராக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடிதம் அலரிமாளிகையில் வைத்து நேற்று பிற்பகல் வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மொனெஷ பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞான பட்டதாரியான நாரத திஸாநாயக்க, கணித பொருளாதார விஞ்ஞான பட்டமேற்படிப்பை மேற்கொண்டதையடுத்து அந்த பல்கலைக்கழகத்திலேயே அவர் பொருளாதார விஞ்ஞான விரிவுரையாளராகவும் சேவையாற்றினார். (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 122




டொறின் மன்மதநாயகம்

இரக்கம் காட்டுபவன் - இளிச்சவாயன்
அக்கறை காட்டுபவன் - அதிக பிரசங்கி
மரியாதை தருபவன் - முட்டாள்
உதவி செய்பவன் - பிழைக்க தெரியாதவன்
குரல் கொடுப்பவன் - வேலைவெட்டி இல்லாதவன்
**என்று அர்த்தங்கள் மாறிவிட்டன...**
**சுயநலம் மிக்க இந்த சமுதாயத்தில்...!!!**

சர்மிலா சிவராஜா

**போலியாய் நடிப்பவனுக்கு பாரெங்கும் ரசிகர் கூட்டம்...**



**உண்மையாய் உழைப்பவனுக்கு வாழ்க்கையே போராட்டம்...**

மதீசன் கணேஷ்

ஒரு பையன் ஆசையாக நாய்க்குட்டி ஒன்று வளர்த்தான், ஒரு நாள் திடீரென்று அந்த நாய்க்குட்டி இறந்து விட்டது. பையன் விடாமல் அழுதுகொண்டே இருந்தான். வீட்டில் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அழுகையும் நின்றபாடில்லை.

பிறகு ஒரு மனோதத்துவ டாக்டரிடம் அழைத்துப் போய் கவுன்சிலிங் செய்யச் சொன்னார்கள். அவரும் பல ஆறுதல் வார்த்தைகளை சொல்லிவிட்டு கடைசியில் அவனிடம், “இதோ பார் இந்த சின்ன விஷயத்திற்காக ஏன் இப்படி அழுகிறாய்? எங்க தாத்தா கூட போன வாரம் செத்துப் போனார். நான் என்ன அழுகிறேனா பார்” என்றார்.

உடனே அந்தப் பையன் “ நீங்க என்ன, என்னை மாதிரி குட்டியில இருந்தா உங்க தாத்தாவை வளர்த்தீங்க?” என்றான் கோபத்தோடு.
டாக்டர் வாயே பேசவில்லை

**குழந்தைகள் என்றும் குழந்தைகளே!**

சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிவ



**அறிவாளிகளுக்கு
அறிவு
அதிகம்...
ஆனால்
முட்டாள்களுக்கு
அனுபவம்
அதிகம்...**

-கண்ணதாசன்

சச்சி சங்கீத்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

## வெற்றிடங்களை நிரப்புமாறு வடமாகாண கல்வியமைச்சரிடம் பெற்றோர் கோருகின்றனர்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 60 பாடசாலைகளில் 8 ஆயிரத்து 577 மாணவர்கள் கல்வி பயிலும் நிலையில் இவர்களுக்கு கல்வி போதித்த 76 ஆசிரியர்கள் ஆசிரியர் கலாசாலைக்கு பயிற்சிக்குச் சென்றுவிட்ட நிலையில் க.பொ.த. உயர் தரம் உட்பட இடைநிலை ஆகிய பிரிவுகளில் ஏற்கனவே உள்ள 31 ஆசிரியர்கள் பற்றாக்குறையுமாக சேர்த்து 107 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையுடன் நான்கு பாடசாலைகளில் அதிபர் மட்டும் கொண்ட நிலையிலும் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் இன்று ஆரம்பமாவதால் மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்படவுள்ளதாக மாணவர்களின் பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகள் வளப்பற்றாக்குறைகளுடனும் ஆசிரியர்கள் பற்றாக்குறைகளுடனும் ஆரம்பமான பாடசாலைகள் இங்கு நியமிக்கப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களது அயராத முயற்சி காரணமாக பௌதீக வளத் தேவைகளில் 90 வீதமானவை பூர்த்தியடைந்த நிலையில் அனைத்து பாடசாலைகளுக்கும் ஆசிரியர் வளங்கள் பங்கீடு செய்யப்பட்டமையால் மாணவர்கள் கல்வி நிலையில் சிறந்த பெறுபேறு களை பெற்றதுடன் போட்டி நிகழ்வுகளிலும் மாகாணம் மற்றும் தேசிய நிலை சென்று சிறந்து விளங்கி வருகின்றனர்.

ஆயினும் நடப்பாண்டில் முதலாம் தவணை, இரண்டாம் தவணைகளின் போது வெளிமாவட்டங்களில் இருந்து இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வருகை தந்த ஆசிரியர்கள் வெளியேறிய நிலையில் இங்கு மீண்டுமொரு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் போர்க்காலத்தில் சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட போது 70 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் துணுக்காய் கல்வி வலயத்திற்கு கிடைத்தமையால் ஆசிரியர் பற்றாக் குறை ஈடுசெய்யப்பட்டது.

தற்போது மூன்றாம் தவணை ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆசிரியர் கலாசாலைக்கு 76 ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக்கு செல்வதாலும் இரண்டு வருட ஒப்பந்தத்தில் வருகை தந்த ஆசிரியர்கள் மீளவும் தமது மாவட்டங்களுக்கு சென்றமையாலும் க.பொ.த. உயர்தரத்தில் ஆசிரியர் பற்றாக்குறையானது தமிழ்- 2, இந்து நாகரிகம்-2, வரலாறு-3, வர்த்தகம்-3, பொருளியல்-3, கணக்கியல்-2 என மொத்தம் 15 உம் இடைநிலைப்பிரிவில் முறையே கணிதம்-2, விஞ்ஞானம்-3, ஆங்கிலம்- 4,தமிழ்-3, உடற்கல்வி-2, வரலாறு- 2 மொத்தம் 16 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இதேவேளை மு/ பாலப்பாணி அ.த.க.பாடசாலை, மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை, மு/புலுமச்சி நாதகுளம் அ.த.க.பாடசாலை, மு/ அலைக்கல்லு போட்டகுளம் அ.த.க. பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளில் ஆசிரியரின்றி அதிபருடன் மட்டும் இயங்குவதால் அதிபர் வலயக்கல்வி அலுவலகத்திற்கும் மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் வெளியே செல்கின்றபோது பாடசா லையை மூடி விட்டு செல்லும் நிலை காணப்படுகின்றது.

எனவே, வடக்கு மாகாண சபை கல்வியமைச்சர் மற்றும் ஏனைய கல்வி அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு மாணவர்கள் கல்வி நிலை பாதிக்கப்படாதவாறு ஆசிரியர்களை நியமித்துத் தருமாறு மாணவர்களது பெற்றோரும் மற்றும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)



கிளிநொச்சி மாவட்டத்தின் மண்வளத்தை பாதுகாத்து சிறந்த பயிர்ச் செய்கையை மேற்கொள் ளும் முகமாக கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கல் பகுதியினரால் கூட்டெரு தயாரிக்கும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடந்த 26 ஆம் திகதி சிவநகர் கிராமத்தில் விவசாய போதனாசிரியர் தலைமையில் கூட்டெரு தயாரிக்கும் பயிற்சி நடத்தப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## சிங்கள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற மீன்பிடி உபகரணங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழிலை மேற்கொள்ளும் சிங்கள குடும்பங்களில் இருந்து 496 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சு கடந்த காலங்களில் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்கி வந்தது.

இந்நிலையில் குறித்த மானியத்தை நிறுத்தி ஒரு மீனவக் குடும்பத்திற்கென தலா ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் மீன்பிடி உபகரணங்களை 496 குடும்பங்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவுள் ளது.

தற்போது 31 மீனவக் குடும்பங்களுக்கு வழங்கக்கூடிய மீன்பிடி உபகரணங்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மிகுதிக் குடும்பங்களுக்குரிய மீன்பிடி உபகரணங்கள் கிடைக்கப் பெற்றதும் மிக விரைவாக இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## ஊடகவியலாளர்களின் புகைப்படக் கண்காட்சி

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படக் கண்காட்சி இம்மாதம் 24 ஆம் திகதி வவுனியாவில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் புகைப்படக் கண்காட்சியில் இதுவரை ஊடகவியலாளர்களினால் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும் இக் கண்காட்சி வவுனியா மாவட்ட செய லகத்தில் இடம்பெறும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர தெரிவித்தார்.

வன்னி 14 என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா தெற்கு பிரதேச செயலக மும் இணைந்து ஏற்பாடு செய்து ள்ள ஊடகவியலாளர்களின் புகைப் படங்களின் தொகுப்பு அடங்கிய இக் கண்காட்சியில் சிறப்பு புகை ப்பட விருதும் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (2-250)

# அனுமன் கோவிலை அகற்ற முடியாது; முதலமைச்சருக்கு பக்தர்கள் மகஜர்

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தின் நகர விளையாட்டு மைதானத்திற்கும் மன்னார் சென்.சேவியஸ் ஆண்கள் கல்லூரிக்கும் அண்மித்ததாயிருந்த தரிசு நிலத்தில் 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்து ஆலயமான அனுமன் கோவிலை அண்மையில் இவ்விடங்களில் குடியேறிய கிறிஸ்தவ மதத்தவர்கள் அகற்றுமாறு கோருவதை எவ்விதத்திலும் தாம் அனுமதிக்க முடியாது என இவ்வாலயத்தின் பக்தர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் மன்னார் நகரசபை நகர பிதாவிற்கும் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த 1988 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினர் மன்னார் மாவட்டத்தில் இருந்த போது தரிசு நிலமாக இருந்த இவ்விடத்தில் உள்ளூர் பக்தர்களும் இந்திய அமைதி காக்கும் படையினரும் இணைந்து சிவன் மற்றும் அனுமன் உருவங்களை வைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

பின்னர் அவ்வாலயத்திற்கு பக்தர்களின் வரவு அதிகரித்த நிலையில் கட்டட வசதிகள் கொண்ட ஆலயமாக உருவாகி இன்று வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்நிலையில் அண்மைக்காலத்தில் தரிசு நிலமாக இருந்த ஆலயத்தின் அயல் பகுதிகளை கிறிஸ்தவ மதத்தவர்கள் வாங்கி வீடுகளைக் கட்டி குடியேறியுள்ளனர்.

இவர்கள் காணியை கொள்வனவு செய்வதற்கு முதல் தமக்கான வீதிகள் மற்றும் சுகாதார வசதிகள் என்பனவற்றை கருத்தில் கொள்ளாது குடியேறிய பின்னர் அனுமன் ஆலயத்தினூடாக தமக்கான போக்குவரத்திற்குரிய வீதி அமைவதாகக் கூறி அதனை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனை எவ்விதத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் இந்து ஆலயம் இருந்த இடத்தில் தாம் குடியேறிவிட்டு பின் அவ்வாலயத்தை அகற்றுமாறு கோருவதை எந்தவொரு இந்து பக்தனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

இவ்விடயத்தில் தாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இந்து ஆலயத்திற்கும் பக்தர்களின் வழிபாட்டிற்கும் எவ்வித பாதிப்புக்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதில் குறிப்பிட்டுள்ளது. (2-15)

## மாணவர்களுக்கு கல்விசார் பொருட்கள் வழங்கப்பட்டன

(குருமன்காடு)

முல்லைத்தீவில்காணாமற்போனோரின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக கல்விசார் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

காணாமற் போனோருக்கான சர்வதேச தினத்தையொட்டி முல்லைத் தீவு- கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



இதில் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்த பத்து மாணவர்களும் காணாமற் போனோரின் குடும்பங்களில் 10 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான கல்விசார் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன், புலம்பெயர் வாழ் உறவுகளான என். சிவகணேஸ், தி. சதீஸ்குமார் ஆகியோர் எழுவோம் தமிழா அறக்கட்டளைக்கு வழங்கிய நிதியின் மூலமாக கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் நான்காவது கட்டம் தற்போது செயற்படுத்தப்படுகின்றது.


நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உள்ளடக்கப்பட்ட 20 மாணவர்களோடு இச்செயற்றிட்டம் தற்போது 127 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்துள்ளது என்றார். (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

908











## மீண்டு(ம்) பிறந்தவங்க!

சுட்டி

உபயோகம் இல்லாத பொருள் என்று எதுவும் இல்லை. நாம் அன்றாடம் பார்க்கும் ஒவ்வொரு பொருளிலும் பல உருவங்கள் மறைந்திருக்கின்றன. கொஞ்சம் கற்பனையைச் சேர்த்தால் அற்புதமான உருவங்களாக மாற்றலாம் என்கிறார் பிரெஞ்சு ஓவியர், கில்பர்ட் லேகிராண்ட்.

பழுதாகிவிட்ட குழாய்கள், பயன்படுத்தி முடித்த பிரஷ், கூர்மை இழந்த ரம்பம், டேபிள் ரென்னிஸ் ஆட உபயோகிக்கும் மட்டை போன்ற பொருட்களில் சின்னச்சின்ன மாற்றங்கள் செய்தும், அவற்றின் மீது ஓவியங்கள் தீட்டியும் புத்துயிர் கொடுக்கிறார் கில்பர்ட். அவை சிங்கம், எலி, கார் ஓட்டும் மனிதன், சிந்திக்கும் மனிதன் உருவம்போல், பார்ப்போரை அசத்துகிறது.

தான் உருவாக்கிய கற்பனைப் பாத்திரங்களைக் கண்காட்சியாக வைத்து, மக்களின் பாராட்டுக்களை அள்ளுகிறார் கில்பர்ட். நம் வீட்டில் இருக்கும் உபயோகமற்ற பொருட்களுக்கும் இப்படிப் புத்துயிர் கொடுக்கலாமே!



கில்பர்ட் லேகிராண்ட்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2014 01


- 1715 - பிரான்சின் அரசன் பதினான்காம் லூயி 72 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் இறந்தான். இவனே நீண்டகாலம் ஆட்சி புரிந்த ஐரோப்பிய அரசன்.
- 1752 - விடுதலை மணி பிலடெல்பியாவை வந்தடைந்தது.
- 1798 - இலங்கையில் முதலியார் வகுப்பை பிரித்தானிய இலங்கையர் மீண்டும் உருவாக்கினர்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் பின்வாங்கிச் சென்ற அமெரிக்கப் படைகளை வேர்ஜீனியாவின் சாண்டிலி என்ற இடத்தில் தாக்கினர்.
- 1897 - வட அமெரிக்காவின் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1902- முதலாவது அறிவியல் புனை திரைப்படம் (A Trip to the Moon) பிரான்சில் திரையிடப்பட்டது.
- 1914 - ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் பேர்க் நகரம் பெட்ரோகிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1914 - கடைசி பயணிக்கும் புறா சின்சினாட்டி மிருகக் காட்சிச் சாலையில் இறந்தது.
- 1928 - அகமெட் சோகு அல்பேனியா நாட்டை முடியாட்சியாக அறிவித்துத் தன்னை அதன் மன்னராக அறிவித்தார்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி போலநதைத் தாக்கி போரை ஆரம்பித்து வைத்தது.
- 1951 - ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தத்தை (ஆன்சஸ் ஒப்பந்தம்) செய்து கொண்டன.
- 1961 - எரித்திரிய விடுதலைப் போர் ஆரம்பமானது. ஹமீட் இட்ரிஸ் அவாட்டெ என்பவர் எதியோப்பியக் காவல்துறை மீது துப்பாக்கிச சூடு நடத்தினார்.
- 1969 - அல் கடாஃபி புரட்சியின் மூலம் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1972 - ஐஸ்லாந்தில் இடம்பெற்ற உலகக் சதுரங்கப் போட்டியில் அமெரிக்கரான பொபி ஃபிஷர் ரஷ்யரான பொரிஸ் ஸ்பாஸ்கியை வென்று உலகக் கிண்ணத்தை வென்றார்.
- 1979 - நாசாவின் பயனியர் 11 ஆளில்லா விண்கலம் சனி கோளை 21,000 கி.மீ தூரத்தில் அடைந்தது. இதுவே முதன் முதலில் சனியை அடைந்த விண்கலம் ஆகும்.
- 1981 - மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் டேவிட் டாக்கோ பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1985 - அமெரிக்க, பிரெஞ்சு கூட்டு முயற்சியில் டைட்டானிக் கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1991 - உஸ்பெகிஸ்தான், சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறி விடுதலையை அறிவித்தது.
- 2004 - ரஷ்யாவில் பெஸ்லான் நகரப் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகள் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களைப் பணயக் கைதிகளாக்கிய நிகழ்வு ஆரம்பமாயிற்று.

### பிறப்புகள்

- 1877 - அ. வரதநஞ்சைய பிள்ளை, தமிழறிஞர் (இ. 1956)
- 1895 - செம்பை வைத்தியநாத பாகவதர், கர்நாடக இசைக கலைஞர் (இ. 1974)
- 1925 ஜ ராய் கிளாபர், அமெரிக்க இயற்பியலாளர்
- 1970 - பத்மா லட்சுமி, அமெரிக்க நடிகை
- 1980 - கரீனா கபூர், இந்திய நடிகை

### இறப்புகள்

- 1557 - ஜாக் கார்ட்டியே, பிரான்சிய புதுப்புலம் ஏகுநர் (பி. 1491)
- 1961 - ஈரோ சாரினென, கட்டிடக்கலைஞர் (பி. 1910)
- 1980 - தனிநாயகம் அடிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தாபகர் (பி 1913)





(தொடரும்)

அன்பு வாசகர்களே!

சிறுவர் பகுதிக்கு உங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் அபிப்பிராயங்களை

ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...இந்த நிலையில் 1992 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய வீரர் மெக்டெர்மாட் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால், காயம் ஏற்பட்ட காரணத்தினால் அவரது ஒப்பந்தம் ரத்தானது. பிரபல டெஸ்ட் வீரரும் யார்க்ஷையர் கவுண்டியைச் சேர்ந்தவருமான ஜியாஃப் பாய்காட் அந்த இடத்திற்கு சச்சினைப் பரிந்துரை செய்தார். யார்க்ஷையர் கிரிக்கெட் குழுவினருக்குள் நடந்த கடுமையான வாக்குவாதத்தில் சச்சினுக்கே வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது. ஆக, இறுதியில் யார்க்ஷையர் தனது நூற்றாண்டு பிடிவாதத்தை தளர்த்தி சச்சினை விளையாட அழைத்தது.

யார்க்ஷையர் முதன்மைச் செயலர் கிரிஸ் ஹசல் மும்பை பறந்து வந்து சச்சினுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். சச்சின் தனது குருநாதர் அச்ரேகர் மற்றும் தனது ரோல்மாடல் கவாஸ்கர் ஆகியோரின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டான். மூன்றாண்டு ஒப்பந்த தொகை 30,000 பவுண்ட்கள். சச்சின் கவுண்டி விளையாட்டுகள் ஆரம்பமாயின. ஓகோ என்று ஆடாவிட்டாலும் ஐந்துக்கும் மூன்று பழுதில்லை என்ற விதத்தில் அவன் ஆட்டம் இருந்தது. மொத்தம் 25 இன்னிங்சில் 1070 ரன்கள் எடுத்தான். சராசரி 46.52. அதுவரை பல கவுண்டி போட்டிகளில் தோல்வியையே சந்தித்துக்கொண்டிருந்த யார்க்ஷையர் சச்சின் ஆடத் துவங்கிய பிறகு வெற்றிகளை குவிக்கத் தொடங்கியது. யார்க்ஷையர் அணியில் சச்சின் இடம் பெற முக்கிய காரணியாக இருந்த ஜியாஃப் பாய்காட் தனது சுயசரிதையில் சச்சினை புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

### இரும்புக் கதவுகளை உடைத்த சச்சின்

சச்சினிடம் அசாத்திய திறமை இருக்கிறது. காயம் காரணமாக எங்கள் அணியிலிருந்து மெக்டெர்மாட் விலகிய போது அவருக்கு பதிலாக வேறு ஒரு வேகப்பந்து வீச்சாளரைத்தான் சேர்க்க வேண்டும் என பலரும் குரல் கொடுத்தனர். ஆனால், நான்தான் விடாப்பிடியாக சச்சினுக்காக வாதாடினேன். என் நம்பிக்கையை வீணடிக்காமல் சச்சின் விளையாடினான். அவனை அணியில் சேர்த்ததற்காக இன்று எல்லோரும் என்னைப் பாராட்டுகின்றனர். யாராவது பாராட்டினால் அதை வெட்கத்துடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் உதட்டோரம் ஒரு சிறிய புன்னகை. வெகு சீக்கிரத்திலேயே சச்சின் யார்க்ஷையர் மக்களின் உள்ளம் திருடிய கள்வனாகி விட்டான். சச்சினுடைய இடத்தில் வேறு யாரையும் என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. யாருக்காகவும் நான் சச்சினை இழக்கமாட்டேன் என்று உணர்ச்சி ததும்ப எழுதியிருந்தார். சச்சின்மீது யார்க்ஷையர் கொண்ட அன்பின் அடையாளமாக அங்குள்ள அரங்கத்தின் வரவேற்பு அறைக்கு சச்சின் பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. இது கூட சச்சினுக்கு கிடைத்த மிகப்பெரிய மரியாதை என்றே கூறவேண்டும். சச்சினுக்கும் கவுண்டிகளில் ஆடவேண்டும் என்று மிகுந்த ஆர்வம். யார்க்ஷையருக்காக ஆடுவது மும்பைக்கு ஆடுவது போன்று உள்ளது. வெளிநாட்டில் இருக்கிறோம் என்ற எண்ணம் எனக்கு எழவில்லை. கொஞ்ச நாட்கள் வெளிநாட்டில் இருந்தாலும் ஹோம்சிக் வந்துவிடும். ஆனால், யார்க்ஷையரில் தங்கியிருந்த காலம் முழுவதுமே ஏதோ வீட்டிற்கு அருகில் இருக்கும் மைதானத்தில் விளையாடுவது போன்ற உணர்வே எனக்கு மேலோங்கியிருக்கிறது. இங்குள்ள ரசிகர்கள் என்னை அவர்கள் வீட்டுப்பிள்ளை போன்றே எண்ணி அன்பைப் பொழிகிறார்கள். அந்த அன்புக்குக் கைமாறாக நான் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். அது நன்றாக விளையாடி யார்க்ஷையரை கவுண்டி சேம்பியன் ஆக்க வேண்டும். இருப்பினும் என்னால் ஒரு செஞ்சுரிகூட அடிக்க முடியவில்லை. ஒவ்வொரு முறையும் அரை சதம் அல்லது செஞ்சுரிக்கு மிக அருகே வந்து ஆட்டம் இழந்து விடுகிறேன். பலமுறை இதுபோல் நடைபெறவே என்னால் யார்க்ஷையருக்காக ஒரு செஞ்சுரிகூட அடிக்க முடியாமல் போய்விடுமோ என்று பயந்தேன். நல்லவேளை ஒரு செஞ்சுரி அடித்தேன்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

> சச்சினிடம் அசாத்திய திறமை இருக்கிறது. திறமை இருக்கிறது. காயம் காரணமாக எங்கள் அணியிலிருந்த மெக்டெர்மாட் விலகியபோது அவருக்கு பதிலாக வேறு ஒரு வேகப்பந்து வீச்சாளரைத்தான் சேர்க்க வேண்டும் என பலரும் குரல் கொடுத்தனர். ஆனால், நான்தான் விடாப்பிடியாக சச்சினுக்காக வாதாடினேன். என நம்பிக்கையை வீணடிக்காமல் சச்சின் விளையாடினான். அவனை அணியில் சேர்த்ததற்காக இன்று எல்லோரும் என்னைப் பாராட்டுகின்றனர். என்கிறார் ஜியாஃப் பாய்காட் தனது சுயசரிதையில்!



# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நம் வர்ழ்க்கையில் நிகழும் சாதாரண சந்தோஷமானது, வெளியில் நிகழும் ஏதோவொன்றின் விளைவு- சில சந்தோஷமான தருணங்கள், சில பொருள் சார்ந்த லாபங்கள், சில சந்தோஷமான செய்திகள், வெற்றிகரமான சில உறவுகள்; அல்லது வெளியுலகில் ஒரு மனிதருடனோ அல்லது ஏதோவொன்றுடனோ ஏதாவது செய்வது, ஆகியவை தான்.

இதுபோன்ற சந்தோஷமானது, நமக்கு வெளியே உள்ள மனிதர்களையோ, சூழ்நிலைகளையோ, சார்ந்திருக்கிறது. இதுபோன்ற சந்தோஷமானது நம்மை வருத்தத்தை நோக்கியும் இட்டுச் செல்லும்; ஏனெனில், மனிதர்களும் சூழ்நிலைகளும் மாறிக்கொண்டே இருப்பவை. அவை எப்பொழுதும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை; வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமாக நடந்துகொள்கின்றன. அவற்றின் நடத்தையில் மாற்றம் ஏற்படும் பொழுது நமது சந்தோஷமும் பாதிக்கப்படுகிறது.

நாம் பேசும் இந்த ஆனந்தப் பரவசம் என்பது வேறுவிதமானது. அது உங்கள் உள்நிலை; வெளியுலகில் நடக்கும் சம்பவங்களால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாதது. அதுவே உங்கள் மையம், உங்கள் நிரந்தரமான நிலை. அதை நீங்கள் கண்டுபிடித்துவிட்டால் வெளியுலகிற்கு ஒரு வெறும் சாட்சியாகி விடுவீர்கள். நீங்கள் ஒரு ஆனந்தமான, கவனிப்பவராகிவிடுவீர்கள். நீங்கள் உங்கள் ஆனந்தப் பரவசத்தை இழக்காமலேயே, அதில் முழுமையாகக் கலந்துகொள்வீர்கள்,

ஒரு சின்ன கதை...

ஒரு குடும்பத்தில் என்ன செய்தாலும் திருப்திப்படுத்த முடியாத, வயதான ஒரு முதியவர் இருந்தார். அவரது குடும்பத்தினர் அவரை ஒரு சந்தோஷமான மனநிலையில் வைக்க எவ்வளவு முயன்றாலும், அவர் பிடிவாதமாகவும் கடுகடுப்பாகவுமே இருந்தார். அவருடைய குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் அவரைப் பார்க்க வந்தும் அவரை மகிழ்ச்சியாக வைக்க முனைந்தும் அவர் மாறாமல் அப்படியே இருந்தார். திடீரென்று ஒருநாள், ஒரே இரவில் அவர் மிகவும் மென்மையானவராகவும், மகிழ்ச்சியானவராகவும் மாறி விட்டார். அவருடைய இந்த திடீர் உருமாற்றம் அவரது குடும்பத்தினருக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. துணிச்சலான அவரது பேத்திகளில் ஒருத்தி அவரிடம் கேட்டாள்: தாத்தா, நீங்கள் எப்படி திடீரென்று மாறிவிட்டீர்கள்? அந்தப் பெரியவர் பதிலளித்தார்: என் வாழ்க்கை முழுவதும் ஒரு திருப்தியான மனதை அடைய நான் முயற்சி செய்தேன். ஆனால், அதில் வெற்றியடைய முடியவில்லை. அதனால், இப்பொழுது நான் அதனுடனேயே திருப்தியாக இருக்கத் தீர்மானித்து விட்டேன்.

(சிரிப்பு)

எல்லாம் நம் மனதின் பிரதிபலிப்பே! மனதின் உதவியுடன் நாம் உள்ளே நிகழும் ஆனந்தப் பரவசப் பிரவாகத்தை நிறுத்திவிட்டோம். ஆனந்தப் பரவசத்தை நாம் ஒரு போதும் வெளியிலிருந்து பெற முடியாது. அது ஏற்கனவே நம் முள்ளேதான் இருக்கிறது. நாம் வெறுமனே உள்ளே பார்க்க வேண்டும், அவ்வளவே. புரிந்துகொள்ளுங்கள்; எங்கும் நிறைந்திருக்கின்ற பிரபஞ்ச விழிப்புணர்வு ஒன்று இருக்கிறது. அது இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் நிரப்பியிருக்கிறது. தனி விழிப்புணர்வு ஒன்று இருக்கிறது. அது நம்மை நிரப்பியிருக்கிறது. இவ்விரண்டிற்குமிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதே மனிதனின் நோக்கமாகும். இந்தத் தொடர்பு நிகழ்வதைத்தான், ஞானமடைதல் அல்லது எல்லையற்ற ஆனந்தப் பரவசம் அடைதல் அல்லது நித்யானந்தம் அடைதல் என்று சொல்கிறோம். நித்யானந்தம் என்பது நிரந்தரமான ஆனந்தப் பரவசம். இந்த உரைகளைக் கேட்பதன் மூலமும் தியான முறைகளைப் பயிற்சி செய்வதன் மூலமும் நாம் இந்தத் தொடர்பைப் பற்றி மேலும் மேலும் விழிப்படைந்து, அதை மேலும் விழிப்புணர்வுடன் அனுபவிக்க முயற்சி செய்கிறோம். இதுவே நமது எல்லா முயற்சிகளின் ஒரே நோக்கமாகும்.

(தொடரும்)

**ஆன்மீகம் 04**

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவினுடைய பிரதிநிதியாக இலங்கைக்கு சுவாமி வரவில்லை


## இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் விளக்கமளிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இலங்கை இராணுவம் நடத்திய பாதுகாப்புக் கருத்தரங்கில், இந்தியாவின் அதிகாரபூர்வ பிரதிநிதியாக பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியம் சுவாமி பங்கேற்கவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் விளக்கமளித்துள்ளார்.

இலங்கை இராணுவம் வருடாந்தம் நடத்தும் பாதுகாப்புக் கருத்தரங்கு கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் கொழும்பில் கலதாரி விடுதியில் இடம்பெற்றது.

இதில் இந்தியாவில் இருந்து பாஜக தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணயம் சுவாமி கலந்து கொண்டு



உரை நிகழ்த்தியிரு ந்தார்.

கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கில் சுப்பிரமணியம் சுவாமி வெளியிட்ட கருத்துக்கள் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியிருந்தன.

இதனால் சுப்பிரமணியம் சுவாமியின் கருத்துக்கள் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கிறதா? என்ற கேள்வி எழுந்திருந்தது. இந்தநிலையில் இந்திய அரசாங்கத்தின் அரசியல் பிரதிநிதியாக சுப்பிரமணியம் சுவாமி கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்றாரா? என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீனிடம் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன்,

இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவராலேயே இந்திய அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியும்.

உதாரணத்துக்கு ஒருவர் அமைச்சராக இருந்தால் அவரை இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கத் தேவையில்லை.

அமைச்சர் பதவியையோ அல்லது அரசாங்கப் பதவியையோ, அதிகாரி பதவியையோ வகிக்காத ஒருவர் ஒரு நாட்டுக்கு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் செல்கிறார் என்றால் அவர் தூதுவராகவோ, சிறப்புத் தூதுவராகவோ நியமிக்கப்படுவார்.

உங்களின் கேள்விக்கான பதில் இதில் உள்ளது என்று பதிலளித்துள்ளார்.

சுப்பிரமணியம் சுவாமி இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக அறிவிக்கப்படாததால் அவர் இந்திய அரசின் பிரதிநிதியாக இலங்கைக்கு செல்லவில்லை என்பது இதன் மூலம் உறுதியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## நட்டத்திற்கே முதலீடு

### அரசின் மீது குற்றச்சாட்டு

தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு அரசாங்கம் மேலும் இரண்டு வருடாங்களுக்கு என 230 பில்லியன ரூபாய்களை முதலீடு செய்யவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்த ஆயிரத்து 500 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ளது.

முத்துராஜவெல முதல் கட்டுநாயக்கவுக்கான எரிபொருள் விநியோக பாதை திருத்தம், 40 முதல் 50 மில்லியன் செலவில் மத்தல விமான நிலையத்துக்கான விநியோக குழாய் அமைப்பு என்பனவும் இதில அடங்குகின்றன.

இந்தநிலையில் குறித்த முதலீடுகள் காரணமாக சர்வதேச சந்தையின் நெகிழ்வு போக்குக்கு அமைய எரிபொருட்கள் விலைகள் இலங்கையில குறைக்கப்பட வாய்ப்புக்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைப்பு காரணமாக இந்தியாவில் எரிபொருட்களின் விலைகள் குறைக் கப பட்டன. எனினும் இதனை இலங்கையில் எதிர்பார்க்க முடியாது என்று பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ)



இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் அடக்குமுறைகளுக்கு ஆட்சேபம் வெளியிட்டே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

# இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகளை இலங்கை சந்திக்க காரணம் என்ன?

## விபரிக்கும் ஆங்கில ஊடகம்

பிழையான நபர்களை சரியான இடங்களில் அரசாங்கம் நியமித்துள்ளமையே இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் காரணம் என்றும் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரிகளை விட நண்பர்களே பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் செய்த தமிழ் தேசியக் கூட்டமைப்பை இந்திய பிரதமர் வரவேற்ற விதம் மற்றும் அந்தக் கூட்டமைப்புடன் அவர் நடத்திய நெருக்கமான பேச்சுகள் என்பன தொடர்பிலேயே ஆங்கில இதழ் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இந்தியா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான வாக்களிப்பின் போது செயற்பட்ட விதம் குறித்து இலங்கை பெருமிதம் அடைந்தது.

இதன் காரணமாக இந்தியாவும் புதிய அரசாங்கமும் கூட தம்முடன் இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் நினைத்தது.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா தற்போது கொண்டுள்ள நெருக்கம், அயல் நாடுகள் எல்லாமே தம்முடன் உள்ளதாக அரச நிர்வாகம் நினைத்துக் கொணடிருப்பதற்குபாதிப்பை கொண்டு வந் துள்ளது.

இதற்கு காரணம் உரிய இராஜதந்திர முனைப்புக்கள் இன்மையாகும். பிழையான ஆட்களை அரசாங்கம் சரியான இடங்களில் நியமித்துள்ளமை காரணமாகவே இலங்கை அரசாங்கம் இராஜதந்திர பிரச்சினைகளை சந்தித்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே, பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமெரிக்காவில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பொதுமக்கள் தொடர்பு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள அமெரிக்க இராஜதந்திரிகளுடன் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளுடனும் பிரச்சினைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

இவையாவும் ஜனாதிபதியின் நண்பர்களால் அரசாங்கத்துக்கு நாட்டுக்கு ஏற்பட்ட பாரிய பாதிப்புக்களாகும் என்று ஆங்கில இதழ் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# இலங்கையின் நல்லிணக்கம் குறித்து அமெரிக்காவில் பேசப் போகும் வாசு!

இலங்கையின் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமெரிக்க ஹூஸ்டன், டெக்சாஸில் இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் உரைநிகழ்த்தவுள்ளார.

ஏதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதியன்று ஹூஸ்டனில் உள்ள ஆசிய சமூக மண்டபத்தில் இரவு 7 மணிக்கு அமைச்சர் வாசு உரையாற்றவுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பில் அமைச்சர் மொழிப்



பிரச்சினையை தீர்க்கும் வகையிலான முன்னெடுப்புக்களை மேற் கொண்டு வருகிறார்.

எனினும் அவரின் முனைப்புக்களுக்கு உரிய அரசாங்க ஆதரவு கிடைப்பதில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த உரையை அடுத்து அமெரிக்க தமிழர்களின் மத்தியில் சிறப்பு பெற்றுள்ள ஹூஸ்டனில் வசிக்கும் குடிவரவு சட்டத்தரணி ஜோர்ஜ் ஆர் வில்லியின் ஒழுங்கமைப்பில் பார்வையாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதில் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வன்முறைகளை கட்டுப்படுத்த அவசர நடவடிக்கை அவசியம்

(கொழும்பு)

ஊவா மாகாண சபை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய குற்றச்சாட்டுக்கு தேர்தல்கள் ஆணையாளரிடம் இருந்து உரிய அவசர நடவடிக்கை அவசியம் என்று இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


இது தொடர்பில் ஆணைக்குழு தேர்தல்கள் ஆணையாளருக்கு பரிந்துரைகளையும் அனுப்பியுள்ளது.


இந்தப் பரிந்துரைகள் மொனராகலை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளருக்கும் வழங்கப்படவேண்டும் என்று ஆணைக்குழு கேட்டுள்ளது.


இதனைத் தவிர பொலிஸார், போக்குவரத்து அமைச்சு, சுற்றாடல் துறை அமைச்சு ஆகியவற்றுக்கும் குழுவின் பரிந்துரைகள் அனுப்பப் பட்டுள்ளன. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் மோடிக்கு உற்சாக வரவேற்பு







பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு முதல் முறையாக தெற்காசியாவுக்கு வெளியே இருதரப்பு விஜயமாக நரேந்திர மோடி ஜப்பானுக்கு சென்றுள்ளார்.

கலாசார, பொருளாதார மற் றும் பாதுகாப்புத் துறைகளைப் பொறுத்தவரை இந்தியாவின் மிக முக்கிய நட்பு நாடுகளில் ஒன்று ஜப்பான் என்று மோடி கூறியுள்ளார்.

கியோட்டோ நகரை சென்றடைந்த பிரதமர் மோடியை நேரடியாக வரவேற்க ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே டோக்கியோவில் இருந்து 400 கிலோ மீற்றர் பயணித்து கியோட்டோவுக்கு வந்தது முன்னுதாரணமற்ற ஒரு செயல் என்று ஜப்பானிய பார்வையாளர்கள் கூறுகின்றனர். பிரதமர் மோடியுடன் முன்னணித் தொழிலதிபர்களான முகேஷ் அம்பானியும், ஆசிம் பிரேம்ஜியும் சென்றுள்ளனர்.

### முதலீடு

மோடியை டுவிட்டரில் பின் தொடரும் ஜப்பானியப் பிரதமர், மோடி பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே ஜப்பானுக்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

ம்ோடி குஜராத் முதல்வராக இருந்தபோதே ஜப்பான் சென்றுள்ளார். அபேயை சந்தித்துள்ளார்.

இந்த இருவருக்குமான தனிப்பட்ட நல்லுறவும், இரு நாடுகளின் பரஸ்பர தேவைகளும், பலமான சீனாவை எதிர்கொள்ள வேண்டிய தேவையும் இந்த இரு நாடுகளையும் நெருங்கிவரச் செய்துள்ளன.

சரக்கு புகையிரதங்களுக்கான பிரத்தி யேக பாதைகளை அமைக்க ஏற்கனவே பெருமளவில் கடனுதவி செய்து வரும் ஜப்பான், அதி உயர் புகையிரதங்களை இந்தியாவில் அமைப் பது உள்ளிட்ட உயர் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்ய விரும்பு கிறது.

இந்தியக் கடற்படையின் தேவைக்காக கடல் விமானங்களை வாங்கும் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## பக்தர்கள் பயணித்த பேருந்து விபத்தில் சிக்கியது

### பத்துப் பேர் பலி

ராஜஸ்தான் மாநிலத்தில் புனித யாத்திரை சென்றவர்களை ஏற்றி வந்த பேருந்து மீது லொறி மோதிய விபத்தில் 10 பேர் பரிதாபமாக பலியாகினர்.

உதய்பூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த சுமார் 60 பேர் அம்மாநிலத்தின் பொக்ரான் அருகே உள்ள பாபா ராம்டியோ ஆலயுத்துக்கு சென்று தரிசனம் செய் துவிட்டு சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

ஜோத்பூர் மாவட்டத்தில் உள்ள பாலி-உதய்பூர் புறவழிச்சாலை வழியாக நேற்றுக் காலை 6 மணியளவில் வந்த போது, மணிடா கிராமம் அருகே எதிர் திசையில் இருந்து வேகமாக வந்த லொறி அந்த பேருந்து மீது பயங்கரமாக மோதி யது.

இந்த விபத்தில் சாரதி உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மேலும் 4 பேர் பலியாகினர். காயமடைந்த 34 பேரில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது. (இ)

## நான் மோடி - நீங்கள் மோரி

### ஜப்பான் புத்த பிக்குவிடம் அறிமுகப்படுத்திக் கொண்ட இந்தியப் பிரதமர்

ஐந்து நாட்கள் அரசுமுறை பயண மாக ஜப்பான் சென்றுள்ள பிரதமர் மோடி இரண்டாவது நாளான நேற்று பிரதமர் நரேந்திர மோடி கியோட்டோ நகரில் உள்ள பழைமையான புத்த ஆலயத்தை சென்று பார்த்தார்.

எட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இந்த ஆலயத்தை ஜப்பான் பிரதமர் ஷின்ஸே அபேயுடன் சுமார் அரை மணி நேரம் சுற்றிப்பார்த்த மோடிக்கு, அந்த ஆலயத்தின் புராதன சிறப்புகளைப் பற்றி ஆலயத்தின் தலைமை பிக்கு விளக்கிக் கூறினார்.

யுனெஸ்கோவின் புராதன சின்னங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்த டோஜி ஆலயம் 5 அடுக்குகளுடன் முழுக்க மரத்தினால் உருவாக்கப்பட்டது. ஜப்பானிலேயே மிகவும் உயரமான 57 மீற்றர் உயர பக்கோடாவை கொணடது(கூம்பு வடிவ கோபுரம்) என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடி இந்த டோஜி ஆலயத்துக்கு வந்தது எங்களுக்கு மகிழ்ச்சியும் இந்த ஆலயத்துக்கு பெருமையும் சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது என்று ஆலயத்தின் தலைமை பிக்கு யாசு நாகா மோரி தெரிவித்தார்.

அப்போது, அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிரதமர், 'நான் மோடி- நீங்கள் மோரி..?' என்று வேடிக்கையாக தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள, அவரது நகைச்சுவையுணர்வை ரசித்த ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட உடனிருந்த அனைவரும் தம்மை மறந்து சிரித்து மகிழ்ந்தனர். (இ)

பாரதச் செய்தி

## சுற்றுலா பேருந்து தீப்பிடித்ததில் 3 குழந்தைகள் உட்பட ஐவர் பலி!

### பலருக்கு தீக்காயம்

இராமநாதபுரம் அருகே உள்ள திருப்புல்லாணியில் சுற்றுலா பேருந்து ஒன்று தீப்பிடித்ததில் மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் பலியானார்கள்.

மேற்கு வங்கத்தை சேர்ந்த பலர் பேருந்து மூலம் நாடு முழுவதும் சுற்றுலா பயணம் செய்து வருகின்றனர்.

அதன்படி தமிழகத்திலும் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் பயணம் செய்த பேருந்து நேற்று திருப்புல்லாணிக்கு வந்தது.

அப்போது பேருந்தில் இருந்த சமையல் ஹாஸ் சிலிண்டர் வெடித்ததில் மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் மேற்கு வங்கத்தை சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. (இ)

## வாரணாஷியை கலாசார நகரமாக்க இந்தியா - ஜப்பானிடையே ஒப்பந்தம்

### ஒப்பந்தம்

ஜப்பான் சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டு பிரதமர் ஷின்சோ அபேயை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

அப்போது இந்திய நகரங்களை 'ஸ்மார்ட்' நகரங்களாக மாற்றுவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

இதில் முதற்கட்டமாக வாரணாசியை கலாசார நகரமாக மாற்ற ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஐந்து நாட்கள் பயணமாக பிரதமர் மோடி ஜப்பானுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்றார். கன்சாய் விமான நிலையத்தில் தரையிறங்கிய அவருக்கு அந்த நாட்டு அரசு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே வெளிநாட்டுத் தலைவர்களை டோக்கியோவில் சந்திப்பதுதான் வழக்கம்.


பிரதமர் மோடிக்காக அவர் டோக்கியோவில் இருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ள கியோட்டோவுக்கு வந்தார்.

அங்கு நகரமேயரின் வீட்டில் மோடியும் ஷின்சோ அபேயும் சந்தித்துப் பேசினர்.

மரபுகளை மீறி இந்தியப் பிரதமர் மோடியை ஷின்சோ அபே சந்தித்துப் பேசியது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

### கியோட்டோ- வாரணாசி

கியோட்டோவைப் போன்று உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியையும் கலாசார அம்சங்கள் மாறாமல் ஸ்மார்ட் நகரமாக மாற்ற இரு நாடுகளிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இருநாட்டு



பிரதமர்கள் முன்னிலையில் கியோட்டோ மேயர் டைசாகு கடோகாவாவும் ஜப்பானுக்கான இந்தியத் தூதர் தீபா வாத்வாவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன் பின்னர் மோடிக்கு ஷின்சோ அபே சிறப்பு விருந்து அளித்தார்.

அப்போது சுவாமி விவேகானந்தரின் புத்தகங்கள், பகவத்கீதை ஆகியவற்றை ஷின்சோ அபேவுக்கு மோடி பரிசாக வழங்கினார்.

கியோட்டோ நகரில் தங்கியிருக்கும் மோடி அங்குள்ள பல்வேறு புராதன இடங்கள், கோயில்களைப் பார்வையிடுகிறார். பின்னர் அங்கிருந்து தலைநகர் டோக்கியோவுக்கு செல்கிறார். அங்கு திங்கட்கிழமை மோடியும் ஷின்சோ அபேயும் அதிகாரபூர்வமாக சந்தித்துப் பேசவுள்ளனர்.

### சீனாவுக்கு எதிராக வியூகம்

கிழக்கு சீனக் கடலில் அமைந்துள்ள சென்காகு தீவுகள் ஜப்பானின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த தீவுப் பகுதிக்ள் தங்களுக்கு சொந்தமானவை என்று சீனா உரிமை கொண்டாடுகிறது.

இந்தியாவின் சில பகுதிகளையும் சீனா உரிமை கொண்டாடி வரும் நிலையில் ஜப்பானும் இந்தியாவும் மிகவும் நெருக்கமாகி உள்ளன.

இரு நாடுகளும் இணைந்து தனியாக போர் பயிற்சியை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் கனிம வளங்களுக்கு சீனாவையே ஜப்பான் பெரிதும் நம்பியுள்ளது. அதை மாற்றி இந்தியாவில் இருந்து பெருவாரியான கனிமங்களை இறக்குமதி செய்ய ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

### விதிகள் தளர்வு

ஜப்பானிய சட்டப்படி வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்கக் கூடாது. சமீபத்தில் இந்தச் சட்டம் தளர்த்தப்பட்டது. ஜப்பானின் அதிநவீன மீட்பு விமானமான யு.எஸ்.2 விமானங்களை இந்தியாவுக்கு விநியோகிக்க அந்த நாடு முன் வந்துள்ளது.

புல்லட் புகையிரத சேவையில் முன்னோடியாக விளங்கும் ஜப்பான், தனது ஷின்கான்சென் புல்லட் புகையிரத தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்கவும் விருப்பம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி போடும் புதிய வீதியில் மீண்டும் பழைய சவாரிதானா?

இந்தியாவுடன் என்ன கதைத்தோம் என்பதை முழுமையாக இந்தியாவும் வெளியிடாது. நாங்களும் வெளியிட மாட்டோம் என்று கூறுகின்றார் மாவை சேனாதிராஜா.

இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திரமோடி முதல் நூறு நாட்களுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடில்லிக்கு அழைத்து உரையாடியதை முக்கியமான ஒரு வரலாற்று நிகழ்வு என்று கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

பல இந்திய- இலங்கை ஊடகங்களும் சந்திப்பின் பின்னர் வெளியிட்ட செய்திகளில் இதே கருத்தைத் தெரிவித்திருந்தன.

இலங்கை அரசாங்கத்துக்குக் கடும் சீற்றத்தையும் பெரும் கடுப்பையும் இந்தச் சந்திப்பு ஏற்படுத்தியிருப்பதை மகிந்த ராஜபக்ச வெளியிட்ட சூடான கருத்துக்கள் தெரியப்படுத்தியிருக்கின்றன.

எனக்குச் சொல்லாமல் சம்பந்தன் புதுடில்லி சென்றுவிட்டார் என்று ஒருவகை உரிமையுடன் மறுபுறம் எதிர்பாராத ஏமாற்றத்துடன் இந்த வார்த்தைகள் வெளிவந்துள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சொன்னதற்கு இரண்டு வேறு வகையான அர்த்தங்கள் கொள்ளலாம்.

முதலாவது- என்னசெய்தாலும் எனக்குச் சொல்லிவிட்டே செய்வதை வழக்கமாகக் கொண்ட சம்பந்தன் புதுடில்லி செல்வதை மட்டும் ஏன் சொல்லாமல் செய்தார் என்பது.

இரண்டாவது, இந்தப் பயணத்தை தமது புலனாய்வுத்துறையினர்கூட கண்டுபிடிக்க முடியாது போனது எவ்வாறு என்பது.

பிரதமர் நரேந்திர மோடி தமது அழைப்பை ஏற்று முதலில் கொழும்புக்கு வருவார் என்று சுப்ரமணியன் சுவாமி சொன்னதை நம்பியிருந்த ஜனாதிபதி மகிந்தராஜபக்சவுக்கு கூட்டமைப்பினர் புதுடில்லி சென்றதும் பிரதமர் வெளிவிவகார அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரைச் சந்தித்து விரிவாக உரையாடியதும் எரிச்சல் கலந்த சினத்தை ஏற் படுத்தி விட்டது உண்மை.

ஆகஸ்ட் 23 ஆம் திகதி சனிக்கிழமையாக இருந்த போதும் தமது உத்தி யோகபூர்வ இல்லத்தில் கூட்டமைப்பினரை பிரதமர் நரேந்திரமோடி சந்தித்து உரையாடினார். முப்பது நிமிடங்கள் மட்டுமே சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டதாயினும் ஒரு மணித்தியாலத்துக்கு அது நீண்டது.

இலங்கை விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுடன் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ் தானிகர் வை.கே.சிங்ஹா விசேடமாக புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கூட்டமைப்பினரின் முக்கியமான மூன்று சந்திப்புக்களிலும் இந்திய உயர்ஸ்தானிகர் கலந்துகொண்டது முக்கியமானது. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சந்திப்புகளில் பங்கு பற்றினர்.

புதுடில்லிச் சந்திப்பு முடிந்த பின்னர் மாவை சேனாதிராஜா, பொன். செல்வராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இலங்கை திரும்ப, சம்பந்தன், சுமந்திரன், சுரேஸ் பிரேமச் சந்திரன் ஆகியோர் தமிழ்நாடு சென்றனர்.

புதுடில்லியில் பிரதமர் மோடியுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் சில அம்சங்களை அல்லது தமக்கு முக்கியம் எனத் தெரிந்தவற்றை முதலில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியவர் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா.

எங்கள் பிரச்சினைகளை இந்தியப் பிரதமர் ஆழமாகக் கேட்டறிந்தார். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்செய்ய வேண்டும் என்று கூறினார். இலங்கையில் தமிழர்கள் கௌரவமாகவும் சமத்துவமாகவும் சுயமரியாதையுடனும் வாழ உரியன செய்வேன் என்று அவர் சொன்னதாகக் கூறிய செல்வராஜா, முக்கியமாக எடுத்துக்கூறிய விடயம் பின்வருமாறு அமைந்தது.

இந்தப்பிரச்சினையை என்னிடம் விட்டுவிடுங்கள். என்னை நம்புங்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியதை தாங்கள் பூரணமாக நம்புவதாகவும் செல்வராஜா எம்.பி. தெரிவித்தார்.

இலங்கை அரசுடன் இவ்விடயங்களை மேற்கொள்ள ஒரு விசேட தூதுவரை நியமிக்க வேண்டும் என்று கூட்டமைப்பினர் விடுத்த வேண்டுகோளை இந்தியப் பிரதமர் நிராகரித்து விட்டாராம்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஊடாக இவ்விடயங்களைத் தாம் நேரடியாகக் கையாளவிருப்பதாக நரேந்திரமோடி கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நரேந்திர மோடி இவ்வாறு கூறிய தன் வாயிலாக சுப்ரமணியன் சுவாமி இந்தியாவின் விசேட தூதராகச் செயற்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

அடுத்ததாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமது காலத்தில் அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்சித் ஊடாக இலங்கை விவகாரங்களைக் கையாண்ட வழியையே மோடியும் கையாளப்போவதும் இங்கு தெரியவந்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் இலங்கைத் தமிழரின் தலைமையை முன்னாள் தூதுவர் டிக்சித் இராணுவப் பாணியில் கையாள முயன்று அனைத்தையும் போட்டுடைத்தவர் என்பதை இவ் வேளையில் நினைவுபடுத்தாமல் இருக்க முடியாது.

தமிழ்நாடு சென்ற கூட்டமைப்பு குழுவினர் அங்கு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. தி.மு.க உட்பட மற்றைய திராவிடக் கட்சிகளைச் சந்திக்க அவர்கள் முனைந்ததாகவும் தெரியவில்லை. ஆனால், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக பிரமுகர்களைச் சந்தித்து உரையாடினர்.

ஒருங்கிணைந்த இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணவே இந்தியா விரும்புகிறது எனவும் அதனைக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டதாகவும் சென்னையில் தெரிவித்த சம்பந்தன், வடக்கு- கிழக்கு இணைப்பையும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதையும் தாங்கள் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மாற்றம் ஏற்படும் என நரேந்திரமோடி உறுதி அளித்ததாகவும் அதனை முழுமையாக நம்பிக்கையுடன் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டதாகவும் சம்பந்தன் மேலும் சொன்னார்.

புதுடில்லிச் சந்திப்புத் தொடர்பாக பொன்.செல்வராஜா மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோர் தெரிவித்த விடயங்களுக்கு மேலதிகமாக ஒரு முக்கியமான கருத்தை யாழ்ப்பாணக் கூட்டமொன்றில் வைத்து மாவை சேனாதிராஜா வெளிப்படுத்தினார்.

இந்தியாவுடன் என்ன கதைத்தோம் என்பதை முழுமையாக இந்தியாவும் வெளியிடாது. நாங்களும் வெளியிட மாட்டோம் என்பதே மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

இந்தக் கூற்றின்படி பார்த்தால் பேச்சுவார்த்தை தொடர்பாக செல்வராஜாவும் சம்பந்தனும் தெரிவித்த விடயங்கள் முழுமையானவை அல்ல என்பதும் முக்கியமானவை சில மறைக்கப்பட்டுள்ளன என்பதும் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியது.

அப்படியென்றால் மறைக்கப்பட்ட விடயங்கள் என்னவாக இருக்கலாம்? ஜெனிவா விசாரணையில் கூட்டமைப்பு சிரத்தை காட்டுவதை இந்தியா விரும்பவில்லை என்று சொல்லப் பட்டிருக்குமா?

இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து சமூகமான தீர்வைக் காண்பதற்கு கூட்டமைப்பு மறுக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்குமா?

இந்தியா எடுக்கும் முடிபுகளைக் கூட்டமைப்பு அனுசரித்து நடக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கப்பட்டிருக்குமா?

முக்கியமாக வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இலங்கை அரசுடன் இணங்கிச் செல்ல வேண்டுமென இந்தியா விரும்புவது தெரிவிக்கப்பட்டு, அதற்காகவே அவரை நேரடியாக இந்தியப் பிரதமர் சந்திப்பதற்கு விரும்புவதாகக் கூறப்பட்டிருக்குமா?

புதுடில்லிப் பேச்சுவார்த்தை நடைபெற்று ஒருவாரம் முடிவதற்குள் முத்தரப்பிலிருந்தும் வெளிவரும் அறிக்கைகளும் கருத்துக்களும் மேற்சொன்ன காரணங்களை தொடுத்துப் பார்க்க வைக்கின்றது.

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தத் தயார் என்று சுமந்திரன் எம்.பி. சொல்வதும், கூட்டமைப்பு கோரினால் பேச்சுக்கு அரசாங்கம் தயார் என்று அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த ஊடகங்களுக்குத் தெரிவிப்பதும் புதிய புதிராக உள்ளது.


சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் பசில் ராஜபக்சவைச் சந்திக்க மறுத்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், இப்போது ஒரே நிகழ்வில் அருகருகே நின்று பங்கேற்பதும் வட மாகாணசபை அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கி அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பசில் ராஜபக்ச நேரடியாக விக்னேஸ்வரனை அழைப்பதும் எவ்வாறு சாத்தியமானது?

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை திறப்பு விழா நிகழ்வில் உரையாற்றிய இந்தியத் தூதுவர் வை.கே.சிங்ஹா, இலங்கை அரசும் வட மாகாண சபையும் இந்திய மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று பகிரங்க வேண்டுகோள் விடுத்ததன் மறைபொருள் என்ன?

ராஜீவுக்கு ஒரு டிக்சித் கிடைத்தது போன்று நரேந்திர மோடிக்கு ஒரு சிங்ஹா வசமாகிவிட்டாரா? எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிடுங்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி கூட்டமைப்பினரிடம் தெரிவித்த உறுதியை சிங்ஹாவின் அழைப்பினூடாகப் பார்க்க முடிகின்றது.

நரேந்திர மோடி போடுகின்ற புதிய வீதியில் கொழும்பும் கூட்டமைப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை எனும் பழைய சவாரியை ஆரம்பிக்கும் நாட்கள் எண்ணப்படுவதாக யாராவது கூறினால் அதில் தவறிருக்க முடியாது.

-பனங்காட்டான்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இரத்த ஆறு ஓடுவதற்கு பொதுபல சேனா வித்திடுகின்றது

## அரசில் அங்கம் வகிக்காதவர் போன்று விமர்சனம் செய்யும் அமைச்சர் றிசாத்!



(கொழும்பு)

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாக வாழ முற்படும் போது பொதுபல சேனா இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தி மீண்டும் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு வழி செய்கின்றது.

அரசு இந்த அமைப்பை கட்டுப்படுத்தாது பாராமுகமாக செயற்படுகிறது என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றம் சாட்டினார்.

பொதுபல சேனா இனம் தெரியாத நபர்களை வைத்து அமைச்சர் ராஜித சேனாரத்ன, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையினையும் என்னையும் சீண்டிப் பார்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இந்த அமைப்பு நாட்டுக்கும் மக்களுக்கும் ஒரு சாபக் கேடாகும்.

அளுத்கம, தர்கா நகர், பேருவளை சம்பவங்களுக்கு பொதுபல சேனா அமைப்பின் செயலாளரே காரணமாகும். இவரின் பேச்சுக்களே இப்பகுதிகளில் வன்முறை ஏற்படக் காரணமாக இருந்ததென பலர் முறைப்பாடு செய்த போதும் பொலிஸார் இவர் மீது விசாரணை நடத்தவில்லை.

காலங் காலமாக இணைந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்த பௌத்த முஸ்லிம் சமூகங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்த பொதுபல சேனா முயற்சிக்கின்றது.

இது குறித்து அரசாங்கமும் பாராமுகமாக இருந்து வருவது வருந்தத்தக்கது என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார். (இ)

# அரசாங்கத்தில் உள்ளவர்களே வன்முறையை தூண்டுகின்றனர்

### திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கம் ஊவா மாகாணத்தில் தேர்தல் பீதியை ஏற்படுத்தி வருவதால், அங்கு வாழும் மக்கள் கடும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாள்ர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதால், பீதியையும் வன்முறையையும் ஏவி தேர்தலில் வெற்றி பெறுவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வருகிறது.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசார பணிகளுக்கு அரச வாகனங்கள், வளங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெருமளவில் பயன்படுத்தி வருகிறது.

அரசாங்கத்தின் அரசியல் ஆதரவாளர்கள் மற்றும் வெளியிடங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான நபர்கள், ஊவா மாகாணத்திற்கு வந்து எதிர்க்கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கு கடும் அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க் தெரிவித்தார். (இ)

# ரயில் மோதி ஒருவர் பலி!

(கொழும்பு)

காலி- பெந்தர பகுதியில் நேற்று முன்தினம் மாலை புகையிரதம் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மருதானையில் இருந்து காலி நோக்கி பயணித்த புகையிரதத்திலேயே குறித்த நபர் மோதியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 45 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அதிவேக வீதியில் வாகன விபத்து!

### *11 பேர் படுகாயம்*

தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பிரதேசத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து மது மற்றுமொரு பேருந்து மோதியதில் மூன்று பெண்கள் உட்பட 14 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் 12.10 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தெற்கு அதிவேக வீதியில் கொட்டாவையிலிருந்து காலி நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து வண்டி, அனுமதி கட்டணத்தை செலுத்துவதற்காக நிறுத்தப்பட்ட போது, பின்னால் வந்த தனியார் பேருந்து மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தனியார் பேருந்தின் சாரதி உட்பட காயமடைந்த 14 பேர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பின்னதுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ)

# வன்முறையை வேடிக்கை பார்ப்பது பொலிஸார் செய்யும் மகா தவறு

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



குற்றச் செயல்களின்போது பொலிஸார் அமைதி காக்கக்கூடாது என பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் மற்றும் பொது மக்களுக்கு எதிரான அழுத்தங்களை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏதேனும் வன்முறைகள் இடம்பெறும் போது அதனை பொலிஸார் வேடிக்கை பார்க்கக் கூடாது.

இவ்வாறு வேடிக்கை பார்ப்பது கடமை தவறும் செயலாகும்.

நாட்டில் அனைவருக்கும் சட்டத்தை ஒரேவிதமாக அமுல்படுத்தப்பட வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.

அரசியல் அமைப்பின் 12 ஆம் சரத்தில் பொலிஸாரின் கடமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தை உரிய விதத்தில் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களுக்கும் சட்டத்தை ஒரேவிதமாக அமுல்படுத்த வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசேட சுற்று நிருபம் ஒன்றின் ஊடாக பொலிஸ்மா அதிபர், பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## இன்னும் இருக்கிறது

என்னுடைய நண்பர் ஒருவருக்கு ஜாதகத்தில் நல்ல நம்பிக்கை. அவரே ஜோசியம்எல்லாம் பார்ப்பார். இந்தக் காலத்தில் இதையெல்லாம் நம்பிக்கொண்டிருக்கிறீர்களே... என்று கேட்டால்,

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் அவர்கள் செய்யும் நல்லது கெட்டதுக்கு ஏற்ப தகுந்த பலனை அனுபவித்தே தீர வேண்டும்" என்பார்.

அது மட்டுமல்ல... ஒருவன் இறந்தால்கூட அவன் செய்த பாவ, புண்ணியங்கள் கூடவே போய்க் கொண்டிருக்கும் என்பார். "அது எப்படி போகும்?" என்று குதர்க்கமாக கேட்டேன். அவர் அதற்கு ஒரு கதை சொன்னார். மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

ஒரு ஊரில் ஒருவர் இருந்தார். அவர் ஜோசியம் பார்ப்பதில் ரொம்ப கெட்டிக்காரர். ஒருவருடைய தலை முடியை வைத்தே அவருடைய ஜாதகத்தை அலசி விடுவார்.

அவர் ஒரு சமயம் கடற்கரைக்குப் போயிருந்தார். அங்கே கரை ஓரமாக ஒரு மண்டையோடு கிடந்தது. அந்த மண்டையோட்டை எடுத்துவைத்து அதன் ஜாதகத்தை அலசியிருக்கிறார்.

அந்த மண்டையோட்டுக்குரிய ஆள் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டு அதை அனுபவிக்க இயலாமல் கடலில் விழுந்து தற்கொலை பண்ணியிருக்கிறான் என்பதை கணித்துவிட்டார்.

இருந்தாலும் அது இன்னும் அனுபவிக்க வேண்டியது மீதமிருக்கிறது என்பதையும் உணர்ந்தார். ஒருவன் உயிரோடு இருந்தால் நல்லது, கெட்டதை அனுபவிக்கலாம். இறந்தபிறகும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதன் அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை.

அந்த மண்டையோட்டை இன்னும் விபரமாக ஆராய்ச்சி செய்வதற்கு தனது வீட்டுக்கே எடுத்துக் கொண்டு போனார். அதை ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டி தனியறையில் பத்திரமாக வைத்துவிட்டார்.

தினமும் இரவில் மனைவியை பூஜையறையில் தூங்கச் சொல்லிவிட்டு நள்ளிரவு 12 மணிக்கு பெட்டியைத் திறந்து பார்ப்பார்.

மண்டையோடு அப்படியே இருந்தது. ஆனாலும் அந்த மண்டையோட்டுக்கு இன்னும் என்ன அனுபவிக்க மீதமிருக்கிறது என்பது விளங்கவில்லை.

இப்படியே ஒரு பத்து நாட்கள் கழிந்துவிட்டன. மனைவிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பக்கத்துவீட்டு அம்மாவிடம் விடயத்தைச் சொன்னார். உடனே அந்த அம்மா "நீ கவலைப்படாதே... நான் கண்டுபிடித்து சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

அன்றிரவே ஜன்னலால் எட்டிப்பார்த்தார். அந்த ஆள் மண்டையோட்டை கையில் வைத்துக்கொண்டு அதைத் திருப்பித்திருப்பி பார்த்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் காலை அவரின் மனைவியைப்பார்த்து, "உன் வீட்டுக்காரருக்கு நீ முதல் மனைவியா? இரண்டாவது மனைவியா?" என்று கேட்டார். "எனக்குத் தெரிந்த வரையில் நான் ஒருத்திதான் அவருடைய மனைவி" என்றார் அவர்.

அதற்கு பக்கத்துவீட்டு அம்மா என்ன சொன்னார் தெரியுமா? "அப்படியில்லை... நீ அவருக்கு இரண்டாவது மனைவி. முதல் மனைவியின் மண்டையோட்டைத்தான் அவர் தினமும் ராத்திரியில் எடுத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றார்.

"அப்படியா விடயம்..." என்று சொல்லிவிட்டு, கணவன் வீட்டில்லாத நேரமாகப் பார்த்து அந்த மண்டையோட்டை ஒரு உரலில் போட்டு உலக்கையால் குத்தி நொறுக்கினார் மனைவி. வெளியில் போயிருந்த கணவன் உள்ளே வந்தபோது, மண்டையோடு உலக்கையிடம் குத்துவாங்கிக் கொண்டிருந்தது.

அது அனுபவிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் இருக்கு என்பதற்கு அர்த்தம் அவருக்கு அப்பொழுது தான் விளங்கியது.

இந்தக் கதையிலிருந்து நாம் இன்னொன்றையும் புரிந்துகொள்ள வேண்டும். நமது வீட்டைப்பற்றி நமக்குப் புரியாததெல்லாம் அடுத்த வீட்டக்காரர்களுக்கு நன்றாகப் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நைஜீரியாவில் பத்துப்பேர் பலியாகினர்

நைஜீரியாவில் ஹார்கோர்ட் துறைமுகம் நோக்கி 35 பயணிகளுடன் படகு ஒன்று சென்றுகொண்டிருந்தது. நடுக்கடலில் படகு சென்றபோது கடலில் இருந்த பாறை போன்ற பொருள் மீது பயங்கர மாக மோதி கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த வர்களில் 10 பேர் கடலில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நீச்சல் வீரர்கள் கடலில் மூழ்கிய 17 பேரை உயிருடன் மீட்டனர். மேலும் 8 பேரை காணவில்லை. அவர்களை தேடும்பணி தீவிரமாக நடந்து வருகிறது.

நைஜீரியாவில் அளவுக்கு அதிகமாக ஆட்களை படகில் ஏற்றுவது, படகு பராமரிப்பில் மெத்தனமாக இருப்பது போன்ற காரணங்களால் அடிக்கடி படகு விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. (இ)

## கோர விபத்து; 23 பேர் பலி

மேற்கு ஆப்கானிஸ்தானில் ஈரான் நாட்டு எல்லையோரமுள்ள ஹெரட் நகரில்நேற்றுக்காலை பெற்றோல்டேங்க்லொறிமீதுவான்மோதியவிபத்தில 23 பேர் பலியாகினர். இந்த விபத்துக்கான காரணம் பற்றிய தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை. எனினும் ஆப்கானிஸ்தானில் மோசமாக பராமரிக்கப்பட்டு வரும் வீதிகளில் அவ்வப்போது இதைப் போன்ற விபத்துக்கள் நடப்பது சகஜம் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 17 ஆம் திகதி வடகிழக்கு ஆப்கானிஸ்தானில் மனிதர்கள் மற்றும் கால்நடைகளை ஏற்றிச் சென்ற ஒரு லொறி விபத்துக்குள்ளானதில் 32 பேர் பலியானதையும் அந்த செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ)




## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு முன்னாள் இராணுவத்தினர் பயிற்சி

### அதிர்ச்சி தகவல் வெளியீடு

சிரியா மற்றும் ஈராக்கில் அரசுப் படைகளை எதிர்த்து தாக்குதல் நடத்தி வரும் போராளிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது 'இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் அன்ட் சிரியா' என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கம் ஆகும்.

ஈராக்கையும், சிரியாவின் ஒரு பகுதி மற்றும் துருக்கியின் ஒரு பகுதி ஆகியவற்றையும் இணைத்து தனி இஸ்லாமிய நாட்டை உருவாக்குவது இவர்களது திட்டமாகும். இதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் அண்டை நாடான லெபனான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்தான், துருக்கி ஆகிய நாடுகளையும் ஒன்றிணைத்து பெரிய அளவிலான இஸ்லாமிய தேசத்தை உருவாக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதன் முதல்கட்டமாக சிரியாவின் எல்லையோரம் உள்ள ஈராக்கின் மொசூல் நகரை கைப்பற்றிய இப்படையினர் அங்கிருக்கும் கிறிஸ்தவர்கள், யாஸிதிகள் மற்றும் குர்த் இன மக்களை ஊரை விட்டு அடித்து விரட்டிவிட்டு இஸ்லாமிய அரசை அமைத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், சிரியாவின் ரக்கா நகரை ஏற்கனவே கைப்பற்றி தங்களது தலைமை பீடமாக அமைத்துக் கொண்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் வடக்கு மற்றும் கிழக்கு சிரியாவின் பல பகுதிகளையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இதன் அடுத்தகட்டமாக, அலெப்போ மாகாணத்தில் இருந்து வடகிழக்கே சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள டர்க்மென், பரே, அக்தரின் ஆகிய நகரங்களையும் அவற்றை ஒட்டியுள்ள சில கிராமங்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். என்றிருந்த தங்களது இயக்கத்தின் பெயரை ஐ.எஸ். என்று சமீபத்தில் சுருக்கிக் கொண்ட இவர்களது படையில் இணைய பலரும் முயன்று வருவதாக தெரிகின்றது. இந்த ஐ.எஸ். படையில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளை சேர்ந்த இஸ்லாமிய இளைஞர்களும் சேர்ந்து சிரியா மற்றும் ஈராக் இராணுவத்தினருடன் போரிட்டு வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.


புதிதாக இந்த இயக்கத்தில் இணையும் இளைஞர்களுக்கு பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரிகள் நவீன வகை போர்ப் பயிற்சிகளை அளித்து வரும் திடுக்கிடும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் செல்போன் உரையாடல் மற்றும் இ-மெயில்களை பிரிட்டன் நாட்டின் உளவுத்துறையான எம்.16 மற்றும் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. ஆகியவை இடைமறித்து உளவறிந்ததில் மேற்கண்ட உண்மை தெரிய வந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகமான 'தி டெய்லி ஸ்டார்' குறிப்பிட்டுள்ளது. (இ)

# பாக். பிரதமருக்கு எதிராக போராட்டம்

### கலவர பூமியானது தலைநகரம்; பொலிஸார் துப்பாக்கிச் சூடு
### 8 பேர் சம்பவ இடத்தில் பலி - 300 பேருக்கு மேல் படுகாயம்







(இஸ்லாமாபாத்)

பாராளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள் செய்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் வெற்றி பெற்றதாகவும், அவர் மீது கொலை வழக்கு இருப்பதால் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக்கூறியும் அவருக்கு எதிராக முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் மற்றும் முஸ்லிம் மத தலைவர் தாஹிருல் காத்ரி ஆகியோர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த போராட்டத்தில் பொலிசார் இடையே நடந்த மோதலில் 8 பேர் கொல்லப்பட்டனர் 300 பேர் காயமுற்றனர். இதனால் பாகிஸ்தானில் பதற்றம் நிலவுகிறது.

கடந்த சில நாட்களாக இஸ்லாமாபாத்தில் பாராளுமன்ற கட்டடம் அருகே போராட்டம் நடத்திவந்த இரு தலைவர்களும் நேற்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் வீட்டை முற்றுகையிட போவதாக தெரிவித்தனர். அதன் பிரகாரம் தங்கள் கட்சி தொண்டர்கள் 25 ஆயிரம் பேருடன் ஷெரிப் வீட்டை நோக்கி சென்றபோது பொலிசார் கண்ணீர் புகை குண்டுவீச்சு மற்றும் இறப்பர்குண்டுகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வீசினர். இதில் 300 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண் தொண்டர் ஒருவர் உட்பட 8 பேர் பலியாகியுள்ளதாக தெரிகிறது. ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். அதே வேளை போராட்டக்காரர்கள் 100 பேரை பொலிசார் கைது செய்துவிட்டனர்.

இதேவேளை இப்போராட்டம் லாகூர் மற்றும் கராச்சியில் பரவியுள்ளது. லாகூரில் பல கடைகள் வன்முறைக்கு இரையாகியுள்ளன. ஜியோ டிவி தாக்கப்பட்டுள்ளது.

வன்முறைக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பே காரணம் என காத்ரி கூறியுள்ளார். ஷெரீப் சகோதரர்கள் பதவி விலக மறுப்பது ஏன் எனவும் அவர் கேளவி எழுப்பியுள்ளார். போராட்டத்தில் ஈடுபட்ட கட்சி தொண்டர்கள் யாரும் பின் வாங்க மாட்டார்கள் என இம்ரான்கான் தெரிவித்தார். (இ)

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அடுத்த இலக்கு அமெரிக்காதான்

### சவுதி மன்னர் எச்சரிக்கை

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை ஒடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், சிரியா, ஈராக்கை அடுத்து, அவர்களின் இலக்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்காதான் என்று சவுதி மன்னர் அப்துல்லா எச்சரித்துள்ளார்.


சகோதர நாடுகளின் தூதர்களுக்கான சந்திப்பின்போது இது குறித்து மன்னர் அப்துல்லா பேசியதாக அந்நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில், நாம் அவர்களை புறக்கணித்தால், அவர்கள் அடுத்த மாதம் ஐரோப்பாவிற்கு குறி வைப்பார்கள். அதற்கு அடுத்து மாதம் அமெரிக்கா மீது. தீவிரவாதத்திற்கு எல்லைகள் இல்லை. அவர்களின் செயற்பாடுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வெளியேயும் செல்லலாம். உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், ஏற்க முடியாத பின்விளைவுகளை சந்திக்க நேரலாம்.

தலையை வெட்டி படுகொலை செய்யும் அவர்களது கொடூர குணம், மிகுந்த கண்டிப்பிற்குரியது. இது புதியதோர் செய்தி இல்லை. அவர்கள் எல்லாவற்றையும் செய்துவிட்டனர். இனி செய்வதற்கு எதும் இல்லை. இதனை அனைத்து தலை வர்களும் ஏற்று, தீவிரவாதத்திற்கு எதிரான வேகமான உரிய நடவடிக்கைகளை தகுந்த சமயத்தில் எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டதாக அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பில் சவுதிக்கான அமெரிக்க தூதரக அதிகாரியும் கலந்துகொண்டார். ஐ.எஸ்.ஐ.எஸ் தனது ஆதிக்கத்தை சிரியா மற்றும் ஈராக்கில் தீவிரப்படுத்தி வருகிறது. இதற்கு எதிராக அந்த இரு நாடுகளிலும் அமெரிக்கப் படைகள் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிரான தீவிர தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது முடிவை வெளியிடாமல் உள்ளார். (இ)

## தீவிரவாதிகள் நகரம் மீது அமெரிக்கா குண்டு வீச்சு!



ஈராக்கில் குர்திஷ்தானில் தீவிர வாதிகள் பிடியில் இருக்கும் பகுதிகளில் அமெரிக்க போர் விமா னங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. அங்கு வாழும் மைனாரிட்டி மக்களை காக்க இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு ள்ளது.

ஏற்கனவே சிஞ்சார் பகுதியில் யாஷிடி பூர்வீக குடிமக்களை காக்க இதுபோன்ற தாக்குதல் நடத்தப்பட் டது. தீவிரவாதிகளுக்கு பயந்து சிஞ்சார் மலையில் தங்கியிருக்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்க ளுக்கு உணவு, தண்ணீர், மருந்து கள் விமானம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு அமிர்லி என்ற நகரத்தின் அருகேயும் தீவிரவாதிகளின் நிலைகளின் மீது அமெரிக்கா போர் விமானங்கள் குண்டுவீசி தாக்கின. இங்கு 'துர்க் மென்' என்ற மைனா ரிட்டி மக்கள் பெருமளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் கைவரிசை

யாழ்.பருத்தித்துறை ரவர்ச் சந்திப். பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்த 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மடிக்கணனி ஒன்று திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டில் இருந்தவர்கள் மூன்று நாட்கள் சுற்றுலா மேற்கொண்டு கண்டிக்குச் சென்றிருந்த வேளையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


சுற்றுலா முடித்து நேற்று முன்தினம் சனிக்கிழமை வீட்டிற்குத் திரும்பிய வேளையில் வீட்டின் பின்பக்கக் கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்ததுடன், வீட்டிலிருந்த பொருட்களைச் சோதனை செய்து பார்த்த போது, அங்கிருந்த மடிக்கணனி திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து, வீட்டு உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)



யாழ்.செய்திகள்




# ஆலயங்களில் இடம்பெறும் உயிர்ப்பலியை தடுத்து நிறுத்தக் கோரி உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியிலுள்ள சைவ ஆலயங்களில் இடம்பெறும் மிருக பலியை நிறுத்தக்கோரி தென்மராட்சி அறவழிப் போராட்டக்குழுவின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டமொன்று கைதடிச் சந்தியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை முன்னெடுக்கப பட்டது.

அறவழிப் போராட்டக் குழு நிறுவுனர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில், காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் குறித்த தென்மராட்சி அறவழிப் போராட்டக் குழுவினர் கூறுகையில்,

எழுதுமட்டுவாழ், மிருசுவில், வரணி, மந்துவில், மட்டுவில், நுணாவில், கைதடி கிழக்கு, கைதடி வடக்கு, கைதடி மேற்கு ஆகிய ஊர்களில் உள்ள சில சைவத் திருக்கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழமையை கைவிடக்கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.



படம்:-29

தென்மராட்சியில் களப்பிட்டி முனீஸ்வரன் கோயில், கிராஞ்சி அண்ணமார் கோயில், இயத்தை அண்ணமார் கோயில், சாமித்தறை அண்ண்மார் கோயில், இடிகிடங்கு முனீஸ்வரன் கோயில், பொன்னாங்கூடல் வைரவர் கோயில் ஆகியனவற்றில் உயிர்ப்பலி கொடுக்கும் நிகழ்ச்சிகள் நடந்தேறி வருகின்றன.

சைவசமயமும் தமிழ் மரபுகளும் சிறப்பாகப் பேணப்படும் தமிழகத்திலும் புதுச்சேரியிலும் வழிபாட்டிடங்களில் உயிர்ப்பலியைத் தடை செய்யும் சட்டங்கள் உள்ளன.

ஆந்திரம் கார்நாடு என்ற கர்நாடகம், கூர்ச்சரம் எனும் குஜராத், இராசபுத்திரம் என்ற இராஜஸ்தான், மலையாளம் என்ற கேரளம் ஆகிய இந்திய மாநிலங்களிலும் வழிபாட்டிடங்களிலும் உயிர்ப்பலித் தடைச்சட்டம் உண்டு.

1981 இல் இலங்கையில் வழிபாட்டிடங்களில் உயிர்ப்பலியிடக்கூடாதென்ற அரச ஆணை வந்தது. ஆனாலும் அந்த ஆணையை நீதிமன்றங்கள் ஏற்கவில்லை. இப்பொழுது உணவுக்கு இறைச்சிவெட்டும் கொலைக் களச்சட்டங்களும், உணவுத் தரச் சட்டங்களுமே வழிபாட்டிடங்களில் உயிர்ப்பலியை நீதிமன்றம் வழியாக ஓரளவு கட்டுப்படுத்தி வருகின்றன.

சைவத் திருக்கோயில்களை உணவுக்கு இறைச்சி வெட்டும் கொலைக்களங்களாகப் பிரதேச சபைகள் அறிவிக்கின்றன. தமிழ்ச் சைவச் சமூகத்தின் பண்பாட்டு வீழ்ச்சியை இந்த அறிவிப்பு எடுத்துக் காட்டுகிறது.

வழிபாட்டுக்கு நான்கு நிலைகள. இவ்வழிகள் அறிவு சார்ந்தன, அன்பு சார்ந்தன, அறம் சார்ந்தன. அருள் சார்ந்தன. அறிவுக் குறைவால், அன்புத் தளர்ச்சியால் அறம் தவிர்ந்ததால் நம்பிக்கைச் சிதறலால் திருக்கோயில்களிலே உயிர்ப்பலி கொடுக்க முனைகிறார்கள்.

வழிபாட்டிடங்களில் உயிர்ப்பலிக்குத் தடைச் சட்டம் கொண்டுவருமாறு கோரி தென்மராட்சியில் கையெழுத்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் இதுவரை 3ஆயிரம் பேர் இதற்கெதிராக கையொப்பமிட்டுள் ளனர். வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் 10 ஆயிரம் பேருடைய கையெழுத்துகளைத் திரட்டி அரசிடம் கொடுக்க உள்ளோம்.

இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ளது போன்று இலங்கையிலும் வழிபாட்டிடங்களில் உயிர்ப்பலிக்குத் தடைச் சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என தெரிவித்தனர்.

இந்த உண்ணா போராட்டத்தில் அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் தங்கவேல், ஆர்வலரும் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினருமான ச.தங்கராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ)

## சான்றிதழ் பெற்ற இராணுவத்தினர்



யாழ். பாதுகாப்புப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒரு மாதகால தமிழ் மொழி கற்கும் பயிற்சி நெறியில் சித்தி பெற்ற ஆயிரத்து 633 இராணுவத்தினருக்கான சான்றிதழ்கள் காங்கேசன்துறையில் அமைந்துள்ள தல்சேவன விருந்தினர் விடுதியில் வைத்து கடந்த வெள்ளிக் கிழமை இரவு வழங்கப் பட்டன.

32 அதிகாரிகள் மற்றும் ஆயிரத்து 601 இராணுவ சிப்பாய்கள் உள்ளடங்கலாக ஆயிரத்து633 பேர் இந்தச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். மேற்படி பயிற்சிநெறி கடந்த ஜூலை மாதம் இடம்பெற்றது.

2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து இராணுவத்தினரும் தமிழ் மொழி கற்றுவிடுவார்கள் என யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா தெரிவித்தார். (இ)

# இராணுவத்திற்கு இயந்திரத்தை வழங்க நல்லூர் பிரதேச சபைத்தவிசாளர் மறுப்பு

யாழ். நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு, நல்லூர் பிரதேச சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரத்தைத் தரும்படி இராணுவத்தினர் கோரிய போதும் தான் அதனை மறுத்து விட்டதாக, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பா.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அகற்றப்படும் கழிவுகள் இதுவரைகாலமும், கோணடாவில் டிப்போவிற்கு அருகிலுள்ள தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றிலேயே போடப்பட்டு வந்தன.

இந்நிலையில், மேற்படி காணியில கழிவுகள் நிரம்பியதாலும், மேலும் கழிவுகள் போடுவதற்கு காணி உரிமையாளர் மறுத்தமையால் அங்கு கழிவுகள் போடமுடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, அரியாலைப் பகுதியில் பிரதேச சபைக்கு அன்பளப்பாகக்கிடைத்த 2 ஏக்கர் காணியை கழிவுகள் கொட்டுவதற்கும், தொடர்ந்து அவற்றை பசளையாக்கும் திட்டமும் 2 மில்லியன் ரூபா செலவில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஆயினும், அப்பிரதேசம் நன்னீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் வரும் பிரதேசமென்றும், மேலும் அந்தப் பகுதியைச் சூழ விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றமையால் அங்கு கழிவுகளைப் போடுவதற்கு கமநல சேவைகள் திணைக்களமும், வடமாகாண விவசாய அமைச்சும் மறுத்திருந்தது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்படும் கழிவுகளைப் கொட்டுவதற்கு இடம் இல்லாத காரணத்தால் கடந்த 27ஆம் திகதி முதல் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுகள் அகற்றும் நடவடிக்கையை பிரதேச சபை தவிசாளர் நிறுத்தியிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பிரதேச சபைக்குச் சென்ற இராணுவத்தினர் கழிவுகளைக் கொட்டுவதற்குரிய இடங்கள் தங்களிடம் இருக்கின்றது எனவும், ஆகையால் கழிவகற்றும் உழவு இயந்திரத்தை தரும்படியும் தவிசாளரிடம் கேட்ட போது அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார் என மேலும் தெரியவருகிறது. (இ)

## தென்மராட்சி பிரதேச கலாசாரப் பெருவிழா




தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசாரப் பெருவிழா தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9 ம்ணிக்கு தென்மராட்சி பிரதேசசெயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தி னராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் சி.சத்திய சீலன் கலந்து சிறப்பித்தார். (இ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழு கால்களுடன் அதிசய ஆட்டுக்குட்டி

இந்தோனேசியா பகுதியில் ஒரு ஆடு 7 கால்களுடன் கூடிய அதிசய குட்டியை ஈன்றுள்ளது.

குறித்த ஆடு ஒரே தடவையில் இரண்டு குட்டிகளை ஈன்ற போதே ஒரு ஆட்டுக்குட்டி 7 கால்களுடன் பிறந்துள்ளது.

எனினும் இவ்விரு ஆடுகளுமே ஆரோக்கியமாக இருக்கின்றன.

பெண் பலி

# நாயின் உரிமையாளருக்கு 24 ஆண்டுகள் சிறை!

அமெரிக்காவில் நாய்கள் கடித்து பெண் உயிரிழந்த வழக்கில் அந்த நாய்களின் உரிமையாளருக்கு 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தெற்கு கலிபோர்னியாவின் லிட்டில்ராக் பகுதியைச் சேர்ந்த வர் அலெக்ஸ் டோனால்டு ஜாக்சன் (31). அவர் தனது வீட்டில் நான்கு நாய்களை வளர்த்து வந்தார். கடந்த ஆண்டு மே 9 ஆம் திகதி அப்பகுதி வழியாகச் சென்ற பமீலாவை (63). ஜாக்சன் வளர்த்த நான்கு நாய்களும் கடித்து குதறின. இதில் அவர் உயிரிழந்தார்.

லாஸ் ஏஞ்சலீஸ் நகர நீதிமன்றத்தில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.தனது நாய்கள் தெருவில் நடந்து செல் பவர்களை கடிக்கிறது என்பது தெரிந்திரு ந்தும் ஜாக்சன் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. அவர் மீதான குற்றம் உறுதி செய்யப் பட்டிருப்பதால் அவருக்கு 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று நீதிபதி தெரிவித்தார்.


எச்சரிக்கை

அமெரிக்காவில் சுமார் 7 கோடி நாய்கள் உள்ளன. ஆண்டுதோறும் நாய்க்கடியால் 30 பேர் உயிரிழக்கின்றனர்.இந்நிலையில் லாஸ் ஏஞ்சலீஸ் நகர நீதிமன்றத்தின் தீர்ப்பு நாய்களை வளர்ப் போருக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந் துள்ளது.

# பண்டைய கால உலக அதிசயங்கள்



பண்டைய உலக அதிசயங்கள். வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழ். கிசாவின் பெரிய பிரமிட், பபிலோனின் தொங்கு தோட்டம், ஒலிம்பியாவின் ஸேயுஸ் சிலை, ஆர்ட்டெமிஸ் கோயில், மௌசோல்லொஸின் மௌசோலியம், ரோடொஸின் கொலோசஸ், அலெக்ஸாந்திரியாவின் கலங்கரை விளக்கம்.14 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இடாய்ச்சு ஓவியர் மார்த்தன் வான் யீம்ஸ்கெர்க் வரைந்தது.



# அந்தரத்தில் தொங்கும் அதிசய பாறை சவுதியில்

பன்னெடுங்காலமாக ஒரு பாறை, தரை மட்டத்தில் படாமல் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் அதிசயம். சவுதி அரேபியாவில் உள்ள அல்-கசனா பகுதியில் ஒரு கிராமத்தில் தான் இந்த அதிசய பாறை உள்ளது. அந்தரத்தில்! தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பாறையில்

கடந்த 23 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1989 ஆம் ஆண்டு இந்த அதிசயப் பாறையின் பின்புறத்திலிருந்த ஒரு தீவிரவாதி சுட்டுக் கொள்ளப்பட்டான் . இன்றும் கூட அந்த சுடப்பட்டவரின் உடலிலிருந்து சிதறிய இரத்தம் உறையாமல் அப்படியே உள்ளது.

இந்த அதிசயப் பாறையின் மற்றொரு அதிசயம் என்னவென்றால், தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப இது மேலும் கீழுமாக அசைவதாகவும் ஒரு அரியத் தகவல்.

# இரட்டை தலைகளுடன் பிறந்த குழந்தை

பாகிஸ்தானில் அண்மையில் இரட்டை தலைகளுடன் கூடிய குழந்தை ஒன்று பிறந்துள்ளது. ஆசாத் ஜம்மு மற்றும் கஹ்மீர் தம்பதிகளுக்கு மூன்றாவதாக பிறந்த இக் குழந்தை மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு வாய் மூலம் பால் ஊட்டு வதற்கும் முடியாமல் காணப்படுவதாக



தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ உலகில் இவ்வாறான அதிசய சம்பவங்கள் இடம் பெறுவது தற்போது காணப்படுகின்ற ஒரு விடயமாகிலும் குறித்த இந்தக் குழந்தைக்கு அவயவங்கள் இரண்டு சோடிகளாக காணப்படுகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நான்கு கண்கள் இரு மூக்குகள் இரு காதுகள் இரு வாய்கள் என விசித்திரமாக காணப்படுகிறது இந்தக்குழந்தை. 3.2 கிலோ எடையுடன் பிறந்த இக்குழந்தை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. தமது வைத்தியசாலை வரலாற்றில் இப்படி ஒரு குழந்தை பிறந்துள்ளமை இதுவே முதல் தடவை என குறித்த வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். தற்போது குழாய் மூலம் குழந்தைக்கு பாலூட்டப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டைனொசரின் பல்லுக்கு பல இலட்சங்கள் மதிப்பு



20 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினம் டைனோசர். இந்த வகையை சேர்ந்தது டைரனோசரஸ் ரெக்ஸ். ரெக்ஸ் என்றால் லத்தீனில் அரசன். அதாவது, டைனோசர் வகையறாக் களிலேயே கம்பீரமான விலங்கு.

வடஅமெரிக்காவின் மேற்கு பகுதிகளில் அந்த நாட்களில் அதிகம் உலா வந்திருக்கிறது. அதற் கான ஆதாரங்கள், புதைந்துபோன டைரனோசரஸ் படிமங்கள் இப்போதும் அவ்வப்போது கிடைக்கின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் மான்டனா மாநிலத்தில் சில மாதங்களுக்கு முன்பு விவசாய நிலத்தை தோண்டும்போது பிரமாண்ட பல் ஒன்று கிடைத்தது. அது 6.7 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த டைரனோசரஸ் ரெக்ஸ் விலங்கின் பல் என்பதை அகழ்வாராய்ச்சியாளர்கள் உறுதி செய்தனர். அது 337.8 கிராம் எடை இருந்தது. லாஸ்ஏஞ்சல்சில் உள்ள போன் ஹம்ஸ் நிறுவனம் மூலம் அந்த பல் தற்போது 29.88 இலட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

டைனோசர் இன விலங்கின் பல் இந்த அளவு அதிகம் ஏலம் போனது இது முதல் முறை என்று போன்ஹம்ஸ் அதிகாரிகள் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலின் அருமை வெயிலில் நின்று
அறிமின் – ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சஜித்துக்கு இராஜயோகம் கட்சிக்கு அதிக அதிர்ஷ்டம்!

## ஜோதிடர் கணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவிற்கு இராஜயோகம் உண்டென பிரபல ஜோதிடவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். சரத் சந்திர போதலகே என்ற ஜோதிடரே இவ்வாறு ஆரூடம் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கிரக நிலைகள் மோசமாக காணப்படுகின்றன. இதன் காரணமாகவே தேர்தல்களில் தோல்வி ஏற்படுகின்றது.

எதிர்வரும் ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டால் தேர்தலில் வெற்றியீட்ட முடியும்.

மிதுன ராசிக்காரரான சஜித் பிரேமதாசவிற்கு தற்போது இராஜயோகம் காணப்படுகின்றது. கட்சியில் அதிக அதிர்ஷ்டம் சஜித்திற்கே காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை சஜித் பிரேமதாசவிற்கு கட்சியின் பிரதித் தலைவர் வழங்கும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் பிரிவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவை உடனடியாக கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என ஊடக நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படுவதை மங்கள சமரவீர எதிர்த்து வருவதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

குறித்த ஊடக நிறுவனத்தின் தலைவர கடந்த காலங்களில் பல தடவைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்திதது, சஜித் பிரேமதாசவை பிரதித் தலைவராக நியமிக்குமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அவசரமாக வெளிநாடு புறப்பட்டு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் சஜித் பிரேமதாசவை பிரதித் தலைவராக நியமிக்கும் யோசனையை சில காலங்களுக்கு ஒத்தி வைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளதாக அந்த கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் மாற்றங்களை செய்ய உள்ளதாகவும் வெற்றிடமாக இருக்கும் பிரதித் தலைவர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கான நபர்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நியமிக்கப்படுவார்கள் எனவும் ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியுள்ளார். (எ-6)

# நவநீதம்பிள்ளை ஓய்வு சமூக நிறுவனங்கள் வருத்தம்

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் பொறுப்பில் இருந்து நவநீதம்பிள்ளை நேற்று ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக நவநீதம்பிள்ளை கடந்த ஆறு ஆண்டுகளாக பணியாற்றி வந்தார். இவர் இலங்கையில் நடைபெற்ற போர் குற்றம் தொடர்பாக, அந்நாடு மீது சர்வதேச விசாரணைக்கு ஐ.நா. உத்தரவிடக் காரணமாக இருந்தார்.

மேலும், இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது நடந்த போர்க்குற்றங்களைக் குறித்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் திகதி இலங்கை சென்று ஒருவார காலம் நவநீதம்பிள்ளை ஆய்வு செய்தார்.

இந்நிலையில், நவநீதம்பிள்ளை வகித்து வந்த, ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் பொறுப்பில் இருந்து நேற்று ஓய்வுபெற்றுள்ளார். இதையடுத்து, அவர் சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவராக நியமிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே, இலங்கைக்கு எதிராக, போர்குற்ற விசாரணையை நடத்திவரும் குழு சிறப்பான முறையில் செயல்படும் என நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளை ஓய்வு பெறுவதையடுத்து, இப்பொறுப்பிற்கு, ஏற்கெனவே ஐ.நா. சார்பில் தேர்வாகியுள்ள, ஜோர்டன் நாட்டின் இளவரசர் சையத் அல் ஹுசைன் இன்று முறைப்படி பொறுப்பேற்கிறார். சையத் அல் ஹுசைன் ஐ.நா.வுக்கான ஜோர்டன் நாட்டு தூதராகவும் செயல்பட்டு வருகிறார்.

இதற்கிடையே, நவநீதம்பிள்ளை ஓய்வுபெறுவதற்கு வருத்தம் தெரி வித்து, இலங்கையைச் சேர்ந்த பல அரசு சாரா நிறுவனங்கள் அவருக்கு கடிதம் எழுதியுள்ளன. (எ-6)

# கிளி.யில் அதிபர்கள் மூவர் விசாரணையின் பின் விடுதலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்கள் மூவர் நேற்று முன்தினம் கந்தசாமி ஆலயதிற்கு அருகில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு நீண்ட நேர விசாரணைகளின். பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் முகவரிக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட உயிர்ப்பதிவு என்னும் புத்தகம் தொடர்பிலேயே மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த புத்தகம் கத்தோலிக்க மதகுரு ஒருவரினால் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகவும், இதன் பிரதியினை பாடசாலைகள் விடுமுறை என்பதால் தாங்கள் இன்னும் படிக்கவில்லை எனவும் கூறிய அதிபர்களிடமிருந்து புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அதிபர்களை உடன் விடுவித்தனர். (எ-6)

## வவு.அரச அதிபருக்கு அச்சுறுத்தல்

வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிசசந்திரவுக்கு, காலி பிரதேசத்தில் வைத்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

காலியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற போது, அவரது வீட்டு வாசலை மறித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ப்றாடோ ரக வாகனத்திலிருந்து இறங்கி வந்த சிறைச்சாலை அதிகாரிகள் இருவர், இந்த கொலை அச்சுறுத்தலை விடுத்துவிட்டுச் சென்றனர் என அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்த இருவரும் அரசாங்க அதிபரின் சகோதரர்கள் எனவும் இவரகளை கைது செய்த பொலிஸார், பிணையில் விடுவித்ததாகவும் காலி பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

# பாரிய மரநடுகைத் திட்டத்தை பொது அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும்

நகரமயமாக்கம் என்பதன் மறு பெயர் நிழல் தரும் மரங்களின் அழிப்பு என்பதாகி விடுகின்றது. கட்டுமானப்பணிகள் காரணமாக மரங்கள் தறிக்கப்படுகின்ற பரிதாப நிலையால் தாங்க முடியாத வெப்பத்திற்கு மண்ணும் மண் வாழ் உயிரினங்களும் ஆளாகின்றன.

அதிலும் குறிப்பாக எங்கள் வட மாகாணத்தைப் பொறுத்தவரை மரங்களுக்கு மாரகச்சனி பல பக்கங்களாலும் ஏற்பட்டன எனலாம்.

யுத்தத்தின் காரணமாக ஏகப்பட்ட பனைகளும் தென்னைகளும் அழிக்கப்பட்டதுடன் காட்டழிப்புகளும் நடந்தேறின. இது தவிர யுத்தத்தால் அழிந்து போன வீடு மனைகளை மீளக் கட்ட வேண்டிய தேவையால் இருந்த மரங்களும் தறிக்கப்பட்டன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்பு என்ற பெயரால் வீதியோரங்களிலிருந்த விருட்சங்கள் அடியோடு தறிபட்டுப் போக எங்கும் நிழல் கிடையாதென்றாகிற்று.

இவை ஒரு புறம் நடந்தேற மறுபுறத்தில் ஊர்களில் இருந்த கதியால் வேலிக்கலாசாரம் சுற்று மதிலின் ஆக்கிரமிப்பில் அகப்பட்டுக் கொள்ள ; கிளுவை, பூவரசு என வேலிக்கதியாலாக இருந்து முழு வீதிக்கும் ஒழுங்கைக்கும் குடை பிடித்து நின்ற மரங்களும் அழிவுறலாயிற்று.

ஒட்டு மொத்தத்தில் மரங்களை அழிப்பது எங்கள் வேலை என்றாகிவிட இப்போது, ஐயா! வெயில் கொடுமை தாங்க முடியவில்லை என்று கூறும் அளவிற்கு நிலைமை ஆளாகிற்று.

வீதி அகலிக்கும் போது மரங்கள் தறிக்கப்படுவதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். வீதி அகலிப்பு அவசியம் என்ற அடிப்படையில் மரங்களைத் தறிப்பதில் ஏற்பட்ட எதிர்ப்பு அவ்வளவாக எடுபடவில்லை.

எனினும் மரங்களைத் தறிக்கக் கூடாதென எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், வீதி அகலிப்பு நடந்ததும் மௌனமாகிவிட்டமை மிகப் பெரும் துரதிர்ஷ்டம்.

வீதி அகலிப்பு முடிவுற்றதும் மரங்களை நடுங்கள் என்று இவர்கள் கோஷம் செய்திருந்தால், நிச்சயம் அந்தக் கோரிக்கை நியாயம் என்று அங்கீகாரம் பெறுவதுடன் மர நடுகை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

எனினும் எங்களிடம் இருக்கக் கூடிய பலவீனம் எல்லாம் இதுதான். ஒரு கோரிக்கையை முன்வைத்து அதில் வெற்றி கிடைக்கவில்லை என்றதும் அதுபற்றிக் பேசாமல் விட்டுவிடுவது. மாற்றுவழிப்பற்றி சிந்திப்பதோ அல்லது எங்கள் இலக்கை அடைவதற்கான வழிவகைகளை பற்றி ஆராய்வதோ இல்லை.

இதன் காரணமாக எங்கள் திட்டங்கள், நோக்கங்கள் வெற்றி பெறாமல் காலம் கடந்து போகின்றன. இத்தகையதொரு காலக் கடப்பில் மர நடுகை என்ற விடயமும் கவனிக்கப்படாமல் இருப்பது ஆரோக்கியமானதல்ல.

எனவே, வடக்கு மாகாணம் முழுவதிலும் மர நடுகைத் திட்டம் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். இத் திட்டத்தை பொது அமைப்புகள், ஆலயங்கள், வங்கிகள், உள்ளூராட்சி மன்றங்கள் முன்னெடுப்பது பொருத்தமானது.

ஒவ்வொரு பிரதேசம், ஒவ்வொரு வீதியென ஒவ்வொரு அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டு மர நடுகை, அவற்றுக்கான பாதுகாப்புக் கூடு, தண்ணீர் ஊற்றுவதற்கான ஏற்பாடு என்ற ஒழுங்கு முறையில் மர நடுகைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டால் எவ்வளவு தான் வரட்சி நிலவினாலும் நாங்கள் பசுமைக் குடைக்குள் வாழ முடியும். இது சர்வ நிச்சயம்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தெய்வீகத் திருநிதி



பிறப்புக்கும் வாழ்வுக்கும் இறப்புக்கும் இயக்க நிலையமாக உள்ளது கருமையம். காந்தச் சுழலின் மைய ஈர்ப்பு, உயிரியக்கமான சூக்கும உடலில் இயக்கமையம், விந்து நாதக் குழம்பின் இருப்பு மையம் மூன்றும் ஒன்றுகூடிய வியக்கத்தக்க ஓர் உயிரின மறைபொருள் புதையல்தான் எந்த உயிரினத்திற்கும் மையப் பகுதியில் அமைந்துள்ள கருமையம் ஆகும். இந்தக் கருமையம்தான் (Soul) ஆன்மா, சீவன், அகம், உள்ளம், உயிரினக் கருவூலம், நெஞ்சம் என்ற சொற்களால் வழங்கப் பெறுகின்றது.

கருமையத்தில் அடங்கியுள்ள ஆற்றலையும் அதன் மதிப்பையும் எவராலும் மொழியைக்கொண்டு உணர்த்திவிடமுடியாது. உதாரணம் மனிதனுடைய கருமையத்தில், இறை நிலையின் பரிணாமம், இயல்பூக்கம் எனும் முறையான நிகழ்ச்சிகளால் இறை நிலையிலிருந்து தொடங்கி இன்றுவரையில் நிகழ்ந்த அத்தனையும் தன்மை வாய்ந்த காந்த அலைத் திவலைகளாகச் சுருங்கி அமைந்துள்ளன. தக்க காலத்தில் தேவையாலும் மன இயக்க நிலையாலும் சூழ்நிலைகளாலும் கரு மையத்துள் சுருங்கியிருக்கும் அனைத்தும் ஒவ்வொன்றாக எண்ணங்களாகவும் செயல்களாகவும் உருவங்களாகவும் வெளிப்படும்.

இத்தகைய பேராற்றல் அமைந்த தெய்வீகத் திருவிளையாட்டின் சூட்சும அரங்கமே கருமையம் ஆகும். இத்தகைய கருமையத்தில் காலம், தூரம், பருமன், இயக்கம் என்ற நான்கு கணங்களுக்கும் எட்டாத இறை நிலையிலிருந்து இன்று நாம் காணும் விரிந்த பேரியக்க மண்டலத்தில் நிகழும் கோடான கோடி இயக்கங்களையும் பிரதிபலிக்கும் காந்தக் கண்ணாடியாகவும் விளங்கும் தெய்வீகத் திருநிதியே கருமையம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை




இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரை 2:1 என்ற ரீதியில் வென்றுள்ளது.

ரன்கிரி தம்புள்ளை மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்படுத்தாட தீர்மானத்தது.

முதலில் துடுப்படுத்தாடிய பாகிஸ்தான் அணி 32.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான் துடுப்பாட்டத்தில் பவாட் அலாம் மாத்திரம் 38 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்டத்தில் 7 வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் திசர பெரேரா 4 விக்கெட்டுக்களையும் தம்மிக்க பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு தனது வெற்றிஇலக்கை அடைந்தது.

இலங்கையின் சார்பில் டில்ஷான் 50 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்தன 26 ஓட்டங்களையும் பெற்று பெற்றுக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணிசார்பில் வஹாப் ரியாஸ், மொஹமட் இர்பான், அஜ்மல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இலங்கை அணியின் திசர பெரேரா தெரிவானார். (க)

## செந்தாரகை விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட போட்டி



பூநகரி காற்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியில் மாபெரும் காற்பந்தாட்ட தொடரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இப் போட்டிகள் எதிர்வரும் 5, 6, 7, 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது. அனைத்து போட்டிகளும் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கிண்ணம் வெல்லும் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் அரையிறுதியில் தோல்வி பெறும் அணிக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இப் போட்டியில் 30 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நலன்புரி சங்கத்தினால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இவ் விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கயிறிழுத்தல், வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற போட்டிகள் இடம்பெறவுள்ளன. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இரணைமடு ஆதவன் வி. கழக கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்

### கிளிநொச்சி புதிய பாரதி சம்பியன்



இரணைமடு ஆதவன் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் கரப்பந்தாட்ட தொடரின் வெற்றிக் கிண்ணத்தை புதிய பாரதி அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் அண்மையில் இரணைமடு ஆதவன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் இளந்தென்றல் அணியும் புதிய பாரதி அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் தலா ஒவ்வொரு செட்டினை பெற்று சமநிலையில் இருந்தன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதி செட்டில் வெற்றிபெற்று 2:1 என்ற கணக்கில் கிளிநொச்சி புதிய பாரதி அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது. (க)

## முதலிடத்தில் டோனி



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஸ்டெம்பிங் செய்து இந்திய அணித்தலைவர் டோனி உலக சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் 2 ஸ்டெம்பிங் செய்து டோனி முதலிடம் பிடித்தார். இவர் இதுவரை 131 முறை ஸ்டெம்பிங் செய்துள்ளார்.

இவரை தொடர்ந்து 129 முறை ஸ்டெம்பிங் செய்து இலங்கை வீரர் சங்ககாரா 2 ஆவது இடத்தில் உள்ளார். முன்னாள் இலங்கை வீரர் கலுவிதறனா (101), முன்னாள் பாகிஸ்தான் வீரர் மொயீன் கான் (93), முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் ஆடம் கில்கிறிஸ்ட்( 92) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். (க)

## இந்திய அணியில் இடம்பெறுவதையே இலக்காக கொண்ட இர்பான் பதான்



ரஞ்சி கிண்ணப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி இந்திய அணி யில் இடம் பிடிப்பதை இலக்காக கொண டுள்ளதாக இர்பான் பதான் கூறியுள்ளார்.

கடந்த 2012 க்கு பின் இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வருகிறார் இர்பான் பதான். இந்திய அணியின் பன்முக வீரரான இவர், இதுவரை 29 டெஸ்ட் (1105 ஓட்டங்கள், 100 விக்கெட்டுக் கள்), 120 ஒருநாள் (1544 ஓட்டங் கள், 173 விக்கெட்டுக்கள்), 24 சர்வதேச டி20 (172 ஓட்டங்கள், 28 விக்கெட்டுக்கள்) போட்டிகளில் விளையாடி இருக்கிறார்.

இந்நிலையில் தனது இலக்கு பற்றி இர்பான் பதான் கூறுகையில், விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பது எனது அடுத்த திட்டம். இதற்காக அடுத்து வரவுள்ள ரஞ்சி கிண்ண தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறேன்.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ண தொடருக்கு முன், இந்திய அணியில் இடம் பிடிக்க முயற்சிப்பேன். ஒருவேளை நிறைவேறாமல் போனால், உலகக் கிண்ண தொடருக்கு பின், நிச்சயமாக இந்திய அணிக்கு மீண்டும் தெரிவு செய்யப்படுவேன் என்று கூறியுள்ளார். (க)

## அமெரிக்க ஓபன் டெனிஸின் 4 ஆவது சுற்றுக்கு வோஸ்னியாக்கி முன்னேற்றம்


யு.எஸ் ஓபன் டெனிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 4 ஆவது சுற்றில் விளையாட, டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி தகுதி பெற்றார்.

ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் போட்டியான யுஎஸ் ஓபன், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடந்து வருகிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவு 3 ஆவது சுற்றில் கரோலின் வோஸ்னியாக்கி 6:3, 6:2 என்ற நேர் செட்களில் ஆண்ட்ரியா பெட்கோவிக்கை (ஜெர்மனி) வீழ்த்தி கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 3 ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6:2, 6:4 என்ற நேர் செட்களில் சேபைன் லிசிக்கியை (ஜெர்மனி) வென்றார்.

குரோஷியாவின் லூசிக் பரோனி, சாரா எர்ரானி (இத்தாலி) செர்பியாவின் ஜெலினா ஜன்கோவிச், ஷுவாய் பெங் (சீனா), லூசி சபரோவா (செக்.), பெலிண்டா பென்சிக் (சுவிஸ்) ஆகியோரும் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளனர்.




ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2 ஆவது சுற்றில் சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர் 6:4, 6:4, 6:4 என்ற நேர் செட்களில் சாம் கிராத்தை (ஆஸி.) வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

முன்னணி வீரர்கள் தாமஸ் பெர்டிச் (செக்.), திமித்ரோவ் (பல்கேரியா), மான்பில்ஸ் (பிரான்ஸ்), பெலிசியானோ லோபஸ் (ஸ்பெயின்), மரின் சிலிக் (குரோஷியா) ஆகியோரும் 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு 2 ஆவது சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் ரூ ரேடக் ஸ்டெபானக் (செக்.) ஜோடி 7:6 (7:3), 6:3 என்ற நேர் செட்களில் யென் சுன் லு (தைபே) ரூ வெஸ்லி (செக்.) ஜோடியை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சம்பியன் அவுஸ்திரேலிய அணியை 31 வருடங்களின் பின் வெற்றிகொண்டது சிம்பாப்வே


சிம்பாப்வே வீரர்களின் நேர்த்தியான பந்துவீச்சும், அணித் தலைவர் எல்டன் சிக்கும்புரா - புரோஸ்பர் உற்செயா ஆகியோர் இணைந்து வீழ்த்தப்படாத 8-வது விக்கெட்டுக்காக பதித்த 55 ஓட்ட இணைப்பாட்டமும் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணியை சிம்பாப்வே அணி 12 பந்துகள் மீதமிருக்கையில் 3 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியானது 31வருடங்களின் பின் (11,406 நாட்கள்) சிம்பாப்வே அணி, அவுஸ்திரேலிய அணியை வீழ்த்திய வரலாற்று வெற்றியாக அமைந்தது.

சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் 4-வது லீக் போட்டி அவுஸ்திரேலியா - சிம்பாப்வே அணிகள் நேற்று ஹராரே விளையாட்டுக் கழக மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.




இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் மைக்கல் கிளார்க்கின் ஆட்டமிழக்காத 68, ஹடின் (49), பென் கட்டிங் (26) ஆகியோரின் இறுதிநேர அதிரடி ஆட்டமும் கை கொடுக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில்9 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை எடுத்தது.

சிம்பாப்வே அணியின் பந்து வீச்சில் உற்செயா, திரிபனோ, வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

210 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை தொடங்கிய சிம்பாப்வே அணி, தனது துடுப்பாட்டத்தை சிறப்பாக ஆரம்பித்த போதும் அதன் பின்னர் சீரான இடைவெளிகளினுள் விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

எனினும் வீழ்த்தப்படாத 8 ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த அணித் தலைவர் சிக்கும்புரா (52), உற்செயா (30) தமக்கிடையில் பகிர்ந்த 55 ஓட்டங்கள் உதவியுடன் சிம்பாப்வே அணி 48 ஓவர்களின் நிறைவில் வெற்றியிலக்கை (211) அடைந்தது.

ஆஸி அணியின் பந்துவீச்சில் நேதன் லயன் 4, ஸ்ரார்க் 2 விக்கெட்டுக் களை கைப்பற்றினர்.

போட்டியின்நாயகனாக சிம்பாப்வே அணித் தலைவர் சிக்கும்புரா தெரிவானார். இத்தொடரின் 5வது லீக் போட்டி அவுஸ்திரேலிய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நாளை இதேமைதானத்தில் நடக்கிறது.

## ஆவரங்காலில் கடை உடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆவரங்கால் சந்தியிலுள்ள கடையொன்றில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் நேற்று அதிகாலை திருடப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடையின் பிற்புற ஜன்னல் ஊடாக உள்நுழைந்து அங்கிருந்த பால்மா, அரிசி, சவர்க்கார வகை, பனடோல், கற்பூரம், குளிர்பானம் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அத்துடன், உண்டியலில் சேகரிக்கப்பட்ட பணமும் உண்டியலுடன் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கடை உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-6)

## டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தொழிநுட்ப கல்விக்கான 150 புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய ஆசிரியர்களை நியமனம் [illegible]வதன் ஊடாக தொழிநுட்ப கல்வி[illegible] நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்திக்க முடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா நிறைவு செய்துள்ள 180 பேருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளன.

புதிதாக ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளன. (எ-6)

## மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலய 3-ம் திருவிழா ஆகிய இன்று மாலை 5.00 மணிக்கு பத்மநாதன் சிவ மைந்தனின் இசைக் கச்சேரியும் இரவு 7.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச.லலிசனின் தெய்வீக உரையும் இடம்பெறும் (ந)

## ஜனவரி 3ஆம் திகதி...

அரசமைப்பின் கீழ் நான்கு வருட காலம் பதவி வகித்த பின்னர் புதிய தேர்தலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கலாம்.

இதன் பின்னர் நவம்பர் 21ஆம் திகதி வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான அழைப்பை தேர்தல் ஆணையாளர் விடுப்பார்.

இந்த அறிவிப்பு வெளியாகி 16 நாட்களுக்குள் வேட்பாளர்களின் பெயர்களை சமர்ப்பிக்க வேண்டும். வேட்பாளர்களின் பெயர்கள வெளியானதும் குறைந்தது இரண்டு மாதத்துக்குள் தேர்தலை நடத்த வேண்டும்.

இதனிடையில் இத்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு சட்ட ரீதியில் தகுதியற்றவர் என பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-6)

## ஜனாதிபதி மகிந்த - புஷ்...

ஜனாதிபதி நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியானதை தொடர்ந்தும் வூஸ்டனில் உள்ள அவரது சகோதரர் டட்லி ராஜபக்ஷவை சந்திக்கும் நோக்கில் அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக அவரது செயலகம் அறிவித்தது.

2011 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மகிந்த ராஜபக்ஷ இப்படியான திட்டமிடாத விஜயம் ஒன்றை அமெரிக்காவுக்கு மேற கொண்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டப்ளியூ.புஷ்சை சந்திப்பதற்காக மகிந்த அந்த விஜயத்தை மேற்கொண்டதாக பின்னர் தெரியவந்தது.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க, வேண்டியதைச் செய்யுமாறு ஜோர்ஜ புஷ் தனக்கு ஆலோசனை வழங்கியதாக மகிந்த ராஜபக்ஷ முன்னர் கூறியிருந்தார். இந்த நிலையில், போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக அமெரிக்காவின் தற் போதைய அரசாங்கம் இலங்கை மீது குற்றம் சுமத்தி வருகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், ஜனாதிபதி, ஜோர்ஜ் புஷ்சை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவை வலுப்படுத்த அமெரிக்க அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுக்க அவரை பயன்படுத்த ஜனாதிபதி முயற்சித்துள்ளதாக ராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எப்படியிருந்த போதிலும் சுவிஸ்சலாந்து நீதிமன்றத்தின் மூலம் போர்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜோர்ஜ் டப்ளியூ.புஷ், அமெரிக்காவை விட்டு வெளியேற முடியாத நிலைமையை எதிர்நோக்கி வருகிறார். இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதிக்கு அவரால் உதவ முடியாது போகும் எனக் கூறப்படு கிறது. (எ-6)

## ஹெல உறுமய...

குறைப்பது மற்றும் அமைச்சர்[illegible]ரின் எண்ணிக்கையை 20 ஆக [illegible]றப்பது உட்பட பல யோசனை[illegible] அடங்கிய இந்த திருத்தத்துக்கு [illegible]வி.பி., கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக கட்சி, லங்கா சமசமாஜ கட்சி ஆகியன் ஆதரவு தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட அரசமைப்புதிருத்த யோசனைகளை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான குழுவொன்று தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட அரசமைப்புதிருத்த யோசனைகளின் நகல்வடிவை செப்ரெம்பர் 30 திகதி பொதுமக்களுக்கு தெரியப்படுத்த உள்ளோம். அதுகுறித்த கருத்துக்களை மக்கள் முன்வைக்கமுடியும் என்று தேரர் தெரிவித்துள்ளார். (எ-6)

## அரசாங்கத்துடன் பேசுங்...

ளில் சனத்தொகை பரம்பலை மாற்றுவது குறித்தே சம்பந்தன் மோடிக்கு தெளிவுபடுத்தினார். அவர் வேறு பல விடயங்களையும் சுட்டிக்காட்டினார்.

வடபகுதியில் இராணுவத்தின் 15 அணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இது அளவுக்கதிகமானது. யாழ் மாவட்டத்தின் வலிகாமத்தில் இராணுவம் நிலங்களை சுவீகரிக்கிறது. இராணுவத்தினரின் குடும்பத்தினரை தங்கவைப்பதற்காக பொது மக்களின் 1600 ஏக்கர் காணி எடுக்கப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ள நிலையிலும் சில வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் கவனத்திற்கு இந்த விடயத்தை கொண்டு சென்றுள்ள போதிலும் அவர் நடவடிக்கை எதனையும் எடுக்க வில்லை என்றார்.

திட்டமிடப்பட்ட முறையில் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவித்த சம்பந்தன் இராணுவத்தினருக்காக 10 ஆயிரம் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் 5 ஆயிரம் சிங்கள வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை, ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக சந்திர சிறியை மீண்டும் ஆளுநராக நியமித்தது, அவரால் வடமாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்தப்படும் இடையூறுகள் என்பவற்றையும் சம்பந்தன் மோடிக்கு தெளிவுபடுத்தினார்.

அரசமைப்பின் 13 திருத்தம் குறித்தும் சுட்டிக்காட்டிய சம்பந்தன் இலங்கை ஜனாதிபதி கடந்த 5 வருடங்களில் அது தொடர்பாகவும் அதற்கு அப்பால் செல்வதாகவும் அளித்த வாக்குறுதிகளை நினைவுபடுத்தினார்.

பாராளுமன்ற தெரிவிக்குழுவில் இடம்பெறாததற்கான காரணத்தையும் தெளிவுபடுத்திய அவர் கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

சம்பந்தன் சுட்டிக்காட்டிய விடயங்கள் குறித்து தான் அறிந்துள்ளதாக தெரிவித்த மோடி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு அரசமைப்பின் 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் அதற்கு அப்பால் செல்வதாகவும் உறுதியளித்ததாக குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள ஏனைய தமிழ பேசும் சமூகங்களின் அரசியல் தலைவர்களுட்ன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொண்ட மோடி இலங்கை அரசாங்கத்துடன் நேரடிபேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் கோரினார்.

இலங்கை தமிழர் விவகாரத்தை கையாள்வதற்கு விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தன் விடுத்த அழைப்பை அவர் நிராகரித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## நாடாளுமன்றத் தெரிவு...

பேச்சுக்களிலிருந்து விலகிக்கொண்ட நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டிய கடமை ஜனாதிபதியைச் சாரும்.

அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் எந்த இடத்தில் இடைநிறுத்தப்பட்டதோ, அந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் உண்மையாகவே விரும்பினால், பேச்சுவார்த்தைகளில் பங்கேற்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுக்க வேண்டும் என மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

புதுடில்லிக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சை ஆரம்பிக்குமாறு கூட்டமைப்பை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## புதிய ஆணை...

ஐ.நா மனித உரிமை ஆணையாளராக ஆறு வருடங்களாக பணியாற்றிய தென்னாபிரிக்காவை சேர்ந்த நவநீதம்பிள்ளை, நேற்றுடன் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

அவரது வெற்றிடத்திற்கே இளவரசர் அல் ஹுசைன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அல் ஹுசைன் ஜோர்தான் அரச வம்சத்தை சேர்ந்தவர் என்பதுடன் ஜெனிவாவுக்கான அந்நாட்டின் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றியுள்ளார். (எ-6)

## யாழ் - கொழும்பு சொகுசு...

தில் ஈடுபடும் அதி சொகுசு தனியார் பேருந்து ஒன்றின் மீது கல் வீச்சுத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் நேற்றுக் காலை 10ற்கு மேற்பட்ட தனியார் பேருந்துகள் பொலிஸினால் தடுத்து நிறுத்திவைக்கப்பட்ட அதேவேளை வழித்தடை அனுமதியின்றி சேவையில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி பேருந்துக்களின் சாரதிகளையும் கைது செய்திருந்தனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணம் மேற்கொள்ளும் தனியார் (அரைசொகுசு) பேருந்து சாரதிகளும், உரிமையாளர்களும், பணியாளர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கொழும்பு பகுதியில் வைத்து தமது பேருந்தும் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட வாய்ப்புள்ளது. எனவே கைது செய்யப்படமாட்டோம் என்பதை உத்தரவாதப் படுத்துமாறும் கோரிக்கை விடுத்தே பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இவ்வாறு போராட்டம் இடம் பெற்ற வேளை அப்பகுதியிலிருந்து புறப்பட ஆரம்பித்த அதிசொகுசு பேருந்து மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு வருகை தந்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதோடு கொழும்பில் வைத்து கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னர் பேருந்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பியது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6,4)

## 49 ஆவது...

துடன் கடந்த காலத்தில் அதிக மாற்றங்களுக்கு உள்ளான நகரங்களில கொழும்புக்கு 10-வது இடம் கிடைத்துள்ளது.

கொழும்பு நகரம் தவிர தெற்காசிய நாடுகளின் நகரங்களில் நேபாளத்தின் காத்மண்டு மாத்திரமே தரப்படுத்தலில் இடம்பிடித்துள்ளது.

ஸ்திரத்தன்மை, உட்கட்டமைப்பு வசதி, கல்வி, சுகாதார சேவை உள்ளிட்ட விடயங்கள் இந்த தரப்படுத்தலின போது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த பட்டியலில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரம் மீண்டும் முதலிடத்தை பெற்றுள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OPTIMO GROUP

**பதவி வெற்றிடங்கள்**

எமது optimo Group Sri lanka நிறுவனத்தின் வலையமைப் பின் இலங்கைக் கிளைகளின் வேலைத் திட்டத்திற்கு அமைய உலக வியாபாரத்தில் விஸ்தரிக்க பல வேலைவாய்ப்புக்கள்.

+ Supervisor + Team Leader + Sales & Promotion

முல்லைத்தீவு, வ்வுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, மலையகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

**குறிப்பு:- அடிப்படை O/L வயது:- 18-35**

**தொடர்பு:-077879 4077, 0771363797**

(சி-8379)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பொன்னையா பாலசிங்கம்

பிறப்பு 05 - 04 - 1936



இறப்பு 13 - 09 - 2013

திதி:-03.09.2014

(தங்கரத்தினம் பாலசிங்கம் அவர்களின் அன்புக் கணவர்
பொன்னையா இலட்சுமியம்மா அவர்களின் அன்பு மகன்
கனகசபை பூரணம் அவர்களின் அன்பு மருமகன்)

*ஆலமரம் போல் வளர்ந்த எம் குடும்ப உறவுகள்*
*எம் தந்தையினை இழந்து ஓராண்டு ஆகியும்*
*அதனை ஈடுசெய்ய முடியாது தவித்து நிற்கும் தங்களின்...*

| பிள்ளைகள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| குமரகுலசிங்கம் | சாந்தகுமாரி | தர்ஷின், தாரகா, அனுஷிகா, |
| ஜெயபாலசிங்கம் | தர்மலட்சுமி | விசிகா, தர்ஷிகன், சங்கீதா, |
| வனிதசிங்கம் | தேவகி | விதுசன், திருக்குமரன், |
| குமரசிங்கம் | விஜயகுமாரி | இளங்குமரன், சுகன்யா, |
| வதனி | ஜெயபாலசிங்கம் (அமரர்) | செல்வகுமரன், முத்துக்குமாரி, |
| வபாசிங்கம் | கௌரி | சிவகுமாரி, நவநீதன், |
| குருகுலசிங்கம் | சுஜீவா | ஜெயவதனன், அபிரா, |
| ரசிகசிங்கம் | பிரவிணா | ரோகித், அபிஷா, |
| ஸ்ரீதரன் | நிஷாந்தினி | சுகன்யா, டெனிசா, தினுஜன், |
| தனபாலசிங்கம் (அமரர்) | | தனுஜன், துஷ்யந்தன், |
| | | நிவியா, சாமினி, அனுசன் |

எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நிறைவினை அனுஷ்டிக்கும் முகமாக அன்னாரது இல்லத்தில் 03.09.2014 அன்று நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றி சிறப்பிக்க வேண்டுமென உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி-8372)

மயிலியதனை
தொண்டைமானாறு

மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்
0772077448, 0772764669

## After A/Level's..

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்



New batches
03. 09. 2014
06.09. 2014
@ 9.00 am

ESOFT Diplomas have an International Recognation

- DiTEC — Diploma in Information Technology — International + ESOFT Certificates — 4 Months
- DiWE — Diploma in Web Engineering — International + ESOFT Certificates — 6 Months
- DiSE — Diploma in Software Engineering — International + ESOFT Certificates — 6 Months
- DiBM — Diploma in Business Management — International + ESOFT Certificates — 4 Months
- DiCA — Diploma in Computerized Accounting — International + ESOFT Certificates — 4 Months
- DiE — Diploma in English (Grammar | Spoken | Comprehension) — International + ESOFT Certificates — 4 Months

edexcel
Assured

Dual Certificates



Rs.3,500
Discount

(சி-8376)

ESOFT — Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No 137, K K S Road, Jaffna | Tel :021 222 4142
HOTLINE : 077 309 9 308

| Nelliady | Kilinochchi | Jaffna 2nd Branch |
|---|---|---|
| 151, Jaffna Rd | 01, Kanagapuram Rd, | 17/1 Brown Rd, Jaffna |
| 021 226 4940 | 021 228 5444 | 021 750 1120 |

## STUDY IN UK , LATVIA

(AUSTRALIA, CANADA, NEW ZEALAND, USA,HUNGARY ) EUROPE

- G.C.E O/L , A/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
- இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
- 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

AFTER A/L

City & Guilds Approved Centre-UK

City & Guilds பரீட்சை... சித்தியெய்து LONDO... சென்றவர்கள் விபரம்.

1. Puvanenthiran mayoora
2. Thavarathinam kapila
3. Piragash malini
4. Murukaiya sarmila
5. Subramanium thayavathi

கடந்த 9 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 60 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

மாணவர்களே! பெற்றோர்களே!! வளமான சந்தர்ப்பம் பயன்பெற்றுக்கொள்ளுங்கள்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

**WORLD EDUCATION CONSULTANCY**
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

**Branch:**
No.04, Kesavil Road,
Kokkuvil,
Jaffna.

(சி-8377)

SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான

### தபால் பொதி விநியோக சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(சி-8374)

**Speed Lanka Express (Pvt) Ltd.**
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

### பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-8373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.